தென்மொழி

வன்பு வடவரை நடுங்கிட வைப்போம்!

ஆயிரந் தடவை இந்தியை அழித்தோம்!
ஆயிரந் தடவை மீண்டும் எழுதினர்!
ஆயிரந் தடவை இந்தியை எதிர்த்தோம்!
ஆயிரந் தடவையும் மீண்டும் புகுத்தினர்!

எந்தவோர் தடவையும் எதிர்த்த எதிர்ப்பால்
இந்தி நுழைவு நின்றதும் இல்லை;
இந்தி மடயர்கள் அதிர்ந்ததும் இல்லை!

இந்திஒன் றன்று;நம் எந்த எதிர்ப்பையும்
இந்திக் காரர்கள் உணர்ந்ததும் இல்லை;
எந்தக்கோ ரிக்கையும் ஏற்றதும் இல்லை!

வடநாட் டாருக்குநாம் வாயிலாப் பூச்சிகள்;
விடமாட் டார்;அவர் வெறி,வீம்பு அப்படி!

ஒரேவொரு முடிவுதான் உன்மத்த ருக்கே!
"அரே,அரே இந்தி முண்டமே! ஆள்கின்ற
பிடாரியே! அன்பிலாப் பேதையே! இதுகேள்:

அடாவடித் தனமாய் அடக்கியும் ஒடுக்கியும்
எங்களை அடிமையாய் எண்ணி வருத்துவாய்!
எங்களுக் குன்மேல் நம்பிக்கை இல்லை!
வாழவும் விடாமல் சாகவும் விடாமல்
ஈழத் தமிழர் படுகின்ற இன்னல்போல்
எங்கட்கும் நீஇடர் செய்துகொண் டிருக்கிறாய்.
இங்குஉன் ஆட்சியில் இருப்பதற் கில்லை.
எங்கள் நிலத்தில் எங்கள்ஆ ளுமையே
தங்கி யிருக்கவும் தமிழினம் தழைக்கவும்
தனித்தமிழ் நாட்டுக்கு விடுதலை தா"-வென
முனித்த குரலொடு முழங்கலே முறையாம்!

அன்புத் தமிழரே! அக்குரல்
வன்பு வடவரை நடுங்கிட வைக்குமே!

ஆசிரியர் பெருஞ்சித்திரனார்

சுவடி : 21 விலை
ஓலை : 11 1-25 உருபா

நமக்கு வந்த மடல்கள்.

0 : 1095 ! (குறிப்பு: 'உண்மை' இதழுக்கு விடுத்த மடலின்படி) அன்புடையீர் ! 'உண்மை' இதழ் 15-7-85 கண்டேன். அதில் 'உண்மையே உன் விலை என்ன?' என்ற தலைப்பின்கீழ் சில மஞ்சள் ஏடுகளினூடே தூய 'தென்மொழி' இதழினையும் சேர்த்து, ஒழிசல் சரக்கு என்று குறிப்பிட்டுள்ளீர்கள். 'உண்மை'யைவிட அன்று, இற்றைத் தமிழகத்தில் நடமாடும் எல்லா இதழ்களின் தமிழ், தமிழ் மக்கள், தமிழ்நாடு—தொண்டில் தலைசிறந்த தொண்டு—தனித்தொண்டு 'தென்மொழி'யினுடையது என்றால் அது மிகையன்று! ஆன்றோர்கள் இதனை அறிவர். 'கெஞ்சுவதில்லை பிறர்பால்; அவர் செய் கேட்டினுக்கும் அஞ்சுவதில்லை...' என்று 26 ஆண்டுகளாக நடையிடும் அதன்முன், தங்கள் ஒப்பீடு. அரிமா முன் சில வெறி பிடித்த நாய்கள் குரைப்பின்...என்னும் நிலையையே எனக்கு நினைவு படுத்துகிறது. தங்கள் நிலைக்கு இரக்கம் கொள்கிறேன். அன்பன், —ஆறுமுகம், வெங்காலூர்-21.

0 . 1096 : 'தென்மொழி' புரந்த நன்னெஞ்சே! வணக்கம், கடந்த 15-7-84 பக்கலிட்ட 'உண்மை' இதழில் 'தனித்தமிழ்' என்னும் தலைப்பில் வெளியான செய்தியினை நீங்கள் அறிவீர்கள்! இவ்வாண்டும் 15-7-85 நாளிட்ட 'உண்மை' இதழில் 'உண்மையே உன் விலை என்ன?' என்னும் தலைப்பில் ஒரு பட்டியல் வெளியிட்டு, மற்ற இதழினும் தங்கள் இதழின் விலைக் குறைவு என்ன என்று விளம்பரம் செய்துள்ளனர். மிக்க நன்றி! தென்மொழித் தாளின் அளவுக்கு 'உண்மை' விலை குறைவாம்; ('குடிசை' உட்பட பல இதழ்கள் குறிக்கப் பெற்றுள்ளன) விலை குறைவு என்றால் கூட்டிக்கொள்ளலாம். ஆனால்; 'உண்மையில் இருப்பதைவிட ஒழிசலான சரக்குகள் அந்த விலைக்கு...!' என்ற சொற்றொடர் எதை மனத்திலிட்டுத் தென்மொழியையும் சேர்த்துக் கூறுகிறதாம்...தெரியவில்லை. பார்ப்பனரைப் பகடி செய்யும் பகடிப்படம் வரைந்தும், எல்லாரும் முன்னேறும் வரை சாதியைப் பிடித்துக் கொண்டும், தமிழினத்தை ஈடேற்ற வடமொழி எழுத்தும் சொல்லும் வைத்துக் கொண்டும், அருவருப்புக் கருத்தை எதிர்ப்பதாகவே எழுதிக்கொண்டும், தி.க., தி.மு.க.-வில் உள்ளவர்களைத் தவிர, பிறரெல்லாம் தமிழரே அல்லரென்றும் நினைத்துத் 'திராவிட நாடு, திராவிடர்க்கே' என்னும் கொள்கையைத் தொலைத்துவிட்டு, மிகவும் உயர்ந்த கருத்துகளைத் தாங்கி வெளிவருகிற 'உண்மை'க்குத் தென்மொழி' ஒழிசலான சரக்குகளைத் தாங்கி வருவதாகத் தெரிந்தால், அது 'தென்மொழி'யின் குறையன்று! அல்லது தென்மொழி கொழுத்த வருவாயில் நடக்கிறது என்றாவது எழுதிக் கணக்கிட்டுப் பட்டியல் நீட்டிடலாம்! அதுவும் செய்யாமல், ஏதோ இவர்கள் மட்டும் இழப்பில் நடப்பதாகக் கணக்கிட்டுக் காட்டியிருக்கிறார்கள்! தென்மொழி ஆசிரியரின் 'செவ்வி' கட்டுரை முதலியன தொடர்ந்து மூன்று இதழில் வெளியிட்டும், அவர் குடும்பப் படத்தை வெளியிட்டும் மகிழ்ந்த 'உண்மை'யை நாமறிவோம்! அந்தத் தென்மொழியையும் சேர்த்துத் தாக்கியிருப்பது 'சட்டியில் உள்ளதுதான் அகப்பையில்'

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

Scanned with CamScanner

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செப் பேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன் நிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

புரப்பாளர்கள் : தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசு. ஆர் பிரான்சிசு, தென்மொழி காரு இளமுருகன்

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி:21] உ0கசு மடங்கல் (ஆகத்து-செப்-85) [ஓலை-11

தமிழக விடுதலைக் கோரிக்கையே தமிழீழத்தையும் வென்றெடுக்க வல்லது!

நாமெல்லாரும் எதிர்பார்க்கும் அல்லது நம்பியிருக்கும் அளவுக்குத் தமிழீழம் அவ்வளவு அண்மையில் கிடைக்குமாறு தெரியவில்லை. அதற்கு அடிப்படையான காரணங்கள் மூன்று. ஒன்று, தமிழ்ப் போராளிகளிடம் நாம் விரும்புகிற மன இணக்கம் இன்னும் ஏற்படவில்லை: எனவே, ஒட்டுமொத்தமான, வலிவான ஒருங்கிணைந்த போராட்டத்திற்கு வாய்ப்பில்லாமலே இருக்கிறது. இரண்டு, கொடுமையும் கயமையும் நிறைந்த இலங்கை ஆட்சி

யினர் தம்மைப் பலவகையிலும் வலுப்படுத்திக் கொள்ள, அமைதிப் பேச்சுகள் என்னும் பெயரால் வழியமைத்துக் கொடுத்து விட்டது. மூன்று இந்திய அரசு தேன் தடவிய பேச்சாலும் நஞ்சு தடவிய நெஞ்சாலும் கரவாக நடந்து, இலங்கைக்கு மறைமுகமான ஆதரவும், நமக்கு வெளிப்படையான சொல்லளவு ஆறுதலும் தந்து கொண்டிருப்பதும், அதைத் தமிழீழப் போராட்ட இயக்கங்களுள் சில நம்பிக்கொண்டு கிடப்பதும்,

இம்மூன்று காரணங்களாலும் தமிழீழப் போராட்டத்தில் ஒரு தொய்வு ஏற்பட்டிருந்தாலும், அதன் நம்பிக்கையில் இன்னும் நமக்கு ஒரு சிறு தொய்வோ நெகிழ்வோ ஏற்படவில்லை. அவ்வாறு ஏற்படவும் வாய்ப்பில்லை. நாம் ஓரிரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சொல்லி வருவதுபோல், இங்குள்ள பொருள்வலிவுடைய தமிழின இயக்கங்கள், தமிழீழப் போராளிகளுக்கு ஒரு கணிசமான தொகையைக் கருவிகள் வாங்க, ஒப்பந்தத்தின் பெயரிலாகிலும் கொடுத்திருக்கலாம். அந்த ஒப்பந்தமும், நம் உதவியால், அவர்கள் தமிழீழம் பெற்றால், நம் தமிழ்நாட்டு விடுதலைக்கு அவர்கள் உதவ வேண்டும் என்பதாகவும் இருந்திருக்கலாம். இந்த நிலைகளையெல்லாம் நாம் இவ்வளவு வெளிப்படையாகப் பேசவேண்டிய தேவை ஏன் வந்தது என்றால், கமுக்கமாகப் பேசிக்கொள்ள நம் ஒருவருள்ளும் மனவொற்றுமையோ; நம்பிக்கையோ இன்னும் ஏற்படவில்லை என்பதால்தான்.

ஆனால், நம் கருத்துப்படி, அல்லது ஆசைப்படி நடைபெறாமற் போனதற்குக் காரணம் இங்குள்ள தமிழின நலம் நாடும் கட்சிகள் அல்லது நாடுவதாகக் கூறிக்கொண்டுள்ள பணத்தால் வலிவுள்ள இயக்கங்கள், மனத்தால் மெலிவுள்ள அல்லது நலிவுள்ளவையாக இருப்பதுதான். நாம் (நம்மைப் பொறுத்தவரையில் ஒருவகையிலும் வலிவான இயக்கமாக இன்னும் வளர முடியவில்லையே — அதுவும் ஒரு காரணந்தான்—என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. வலிவிருந்தால் நாம் அவ்வாறு நடந்திருப்போமா என்பதைக் காலந்தான் உணர்த்திக் காட்ட முடியும்) ஆனால், இப்பொழுதுள்ள நிலையில் இதையெல்லாம் பேசி, நடக்கப் போவது ஒன்றுமில்லை; ஓர் ஆற்றாமைக்காகத்தான் இதைக் கூற வேண்டி உள்ளது. இது நிற்க.

இனி, இக் கட்டுரைத் தொடக்கத்தில், தமிழீழத் தொய்வுத் தொடர்பாகக் கூறிய மூன்று காரணங்களை இனிமேலாகிலும் நாம் தவிர்க்கொள்ள இயலுமா என்பது பற்றிப் பார்க்கவேண்டும்.

இவற்றுள் இத் தொய்வுக்கு முதல் காரணமாகக் கூறப் பெற்றது, தமிழீழப் போராளிகளின் இயக்கங்களுக்குள்ள ஒற்றுமையின்மை. இந்நிலை, இந்த அளவில் மட்டுமே நின்றிருந்தாலும் தாழ்வில்லை. அதனால் ஒன்றும் அவ்வளவு பெரிய இழப்புகள் நேர்ந்துவிடப்போவதில்லை: ஆனால், ஒற்றுமையில்லாத தன்மையைவிட, தங்களுக்குள் ஒன்றையொன்று அழித்துக்கொள்கின்ற தன்மை அதிகமாகிக் கொண்டே வருவதுதான், நம்மால் ஏற்றுக்கொள்ள இயலாததாகவும் மிகவும் உள்ளம் நைய வேண்டியதாகவும் உள்ளது; தமிழினத்தின் பலவாறான உள்முகத் தன்னழிவுகள்,

இவ்வின முன்னேற்றத்தையே பெரிதும் தடைப்படுத்தி வருகின்
றன என்பதை நம் முற்கால இக்கால அரசியல் வரலாறுகள்
தெளிவாக உணர்த்துகின்றன. ஆனாலும், நாம் இதிலிருந்து
இன்னும் மீள முடியாதவர்களாகவே உள்ளது, நம்மைப் பெரிதும்
அழிவுக்குள்ளாக்கி அடியோடு அழித்து விடுமோ என்று அஞ்ச
வேண்டியுள்ளது.

வெறும் அரசியல் நிலைகளில்; அஃதாவது பதவிப் போராட்டப்
போட்டிகளில் இவை இருப்பது போலவே, விடுதலைப் போராட்ட
முயற்சிகளிலும் இருப்பது, இவ்வினத்தை என்றுமே ஈடேறாது
என்பதை நாம் ஒவ்வொருவரும் உறுதியாக நெஞ்சில் இருத்திக்
கொள்ளவேண்டும். இங்கு இன்னொன்றையும் நாம் எண்ணிப்
பார்க்கவேண்டும். சில பொதுக்குற்றங்களை நம்மில் ஒருவர் நம்
இனநலம் பற்றிக் குறிப்பிடுகையில், நாம் ஒவ்வொருவரும் அக்
குற்றம் நம்மிடம் இல்லாதது போலவும், பிறரிடம் இருப்பது
போலவுமே கருதிக் கொள்கிறோம். ஏனெனில் பொதுமாந்த
மனவியல்பு அப்படி. ஆனால், நம் போல் உண்மையிலேயே பொது
நலம் கருதுபவர்களுக்கு அப்படிக் கருதிக் கொள்வது கூடாது.
இங்கு உண்மையல்லாதவரும் உண்மையுள்ளவர்போல் நடிக்கின்
றனர். உண்மையுள்ளவரும் உண்மையில்லாதவர் போல் பிறர்
கருதுமாறு இயல்பாகவே நடக்கின்றனர். பெரும்பாலும் போலி
களுக்கே நடிக்க, முடிகிறது. உண்மைகள் நடிக்க இயல்வதில்லை.
எனவே, நிலைகள் தடுமாறிப் போகின்றன. விளைவுகள் தலைமாறிப்
போகின்றன.

நம் விடுதலைப் போராட்ட முயற்சிகளிலும் சில நிலைகள்
இப்படித்தான் உள்ளன. ஆனாலும், எப்படியோ அம் முயற்சிகளை
நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் பாராட்டவும், ஊக்க
வுமே செய்கின்றோம். என்றாலும், நம் பாராட்டும், ஆதரவும்,
ஊக்கமும் முழுவதும் பயன்படாத வகையிலும், அல்லது வீணாகிப்
போகும் அளவிலும், அப் போராட்ட இயக்கங்கள் தங்களுக்குள்
ளேயே பொருதிக்கொள்ளும் பொழுது நாம் என்ன செய்யமுடியும்?

நாம் அனைவரும் – நமக்கென ஒரு பொது எதிரி, வரலாற்
றுப் பகைவன் ஒருவன் இருக்கிறான்-என்பதை மறக்கவேகூடாது.
அத்துடன் நமக்குள் பல வேறுபாடுகள் இருந்தாலும் சிறப்பான
பொதுவான ஒரு நோக்கம் இருக்கின்றது. என்பதையும் நாம்
மறந்துவிடவே கூடாது. ஆனால், இதை நாம் எங்கே செய்கி
றோம்? நேர்மை பேசும், பொதுநலம் உண்மையாகக் கருதும் —
அனைவரும் நாம் இதை ஒரு நொடிப் பொழுதேனும் எண்ணிப்
பார்க்கவே வேண்டும். இதுவரை, (நம் மனச்சான்றின் பார்வை
யுடன் சொல்லுங்கள்) நாம் எண்ணிப் பார்த்தோமா? அல்லது
இனியாவது எண்ணிப் பார்ப்போமா? அவ்வாறு
எண்ணிப் பார்க்கின்ற அன்றுதான் நம் முயற்சிகள் வலுப்பெற
முடியும். அதுவரை நம் அறிவுகள், இயக்கங்கள், முயற்சிகள்
அனைத்தும் விழலுக்கிறைத்த நீரே! பாலை நில நிலவே!

இனி, பேச்சு, பேச்சு என்று நாம் பேசுகின்ற கால இடை
வெளிக்கு இடமே தரக்கூடாது. இந்தப் பேச்சால் முதலில்,
எதிரியின் தாக்குதல் குறைந்ததா? இல்லையே. மாறாக எதிரியின்
கைகளையன்றோ வலுப்படுத்தியுள்ளது! இவ் விணக்கப் பேச்சு

என்றைக்குத் திம்புவில் தொடங்கினதோ அன்றிலிருந்து இன்று வரை, ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்னும் வகையில், நாளுக்கு நாள் மேலுக்கு மேல் சிங்கள வெறியரின் தாக்கங்களும் அழிவுகளும் அதிகமாகி உள்ளனவே தவிர, ஓர் எள்மூக்கத்துணையும் குறையவில்லையே! இனியும் பேச்சு எதற்கு? இதைப் பேச்சு தொடங்கு முன்பிருந்தே சொல்லி வருகிறோம். இனியும் போராளிகள் இதனை உணர்ந்ததாகத் தெரியவில்லை. இந்தப் பேச்சைத் தவிர்ப்பதால் சில விரும்பத்தகாத விளைவுகளை நாம் எதிர்நோக்க வேண்டியிருந்தாலும், அவற்றையும் நாம் வரவேற்கவே வேண்டும். சாகத் துணிந்தவனுக்கு கடல் நீர் முழங்கால் ஆழமன்றோ? ஒன்றால் நாம் அனைவருமே வாழ்ந்தாக வேண்டும். அன்றால் நாம் அனைவருமே போராடிச் செத்தாக வேண்டும்! இதில் பேச்சென்ன மூச்சென்ன? இப்பொழுது மட்டும் வாழவா வாழ்கிறோம்? செத்துக்கொண்டுதானே உள்ளோம்! எனவே, இனியும் எதிரி வலுப்பட நாம் கால இடையீடு தருதல் கூடாது.

அடுத்து, இந்தியாவின் அணுகுமுறையே கரவானது; ஓர வஞ்சனையானது; நயன்மையில்லாதது; நடுநிலையற்றது. நாம் இன்னும் அதை நம்பிக் கொண்டுதானே உள்ளோம். இதுவரை இராசீவ்காந்தியின் வாயிலிருந்து, இலங்கைப் பேயர்களைக் கண்டிக்கும் ஒரு சொல்லாகிலும் வெளியே வந்துள்ளதா? எவராவது சொல்ல முடியுமா? கண்டிக்கவே மனம்வராத அவர்களிடம், நன்மையான முடிவை எதிர்பார்க்க முடியுமா? ஆனால், ஏனோ, எப்படியோ தெரியவில்லை, இந்தியாவின், இராசீவ் காந்தியின் கரவான, நம்மை மெலிவுபடுத்தும் முயற்சிகளில் இன்னும் நம் போராளிகளில் சிலர் நம்பிக்கை வைத்துள்ளனர். இது, நம் முயற்சிகளை எங்குக் கொண்டுபோய் விடுமோ, தெரியவில்லை! அஃது அவர்களுக்கும், அந்த இராசீவ் காந்திக்குமே வெளிச்சம்! நம் கருத்துகள் காலத்தால் போய் போகாதவை என்பதை அந்தக் காலமேதான் உணர்த்த வேண்டும். அதுவன்றி, வேறு வகையாக, நாம் இதைவிட வெளிப்படையாக எப்படி உணர்த்துவது?

இனி, இறுதியாகவும் உறுதியாகவும் நாம் ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

தமிழீழம் கிடைத்துத்தான், தமிழ் நாட்டுக்கான முயற்சிகள் நடைபெற வேண்டும் என்பதாக இதுநாள் வரை, ஒருவகையாக, நாம் நம்பியிருந்தோம். ஆனால், இன்றைய நிலையில், தமிழீழ முயற்சிகள் அவ்வளவு நம்பிக்கை ஊட்டுவதாக இல்லை. நம்பிக்கை இயல்பான நம் உள்ள ஊக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருப்பினும், தமிழீழப் போராளிகளின் செயல் முயற்சிகளும், நடைமுறைப் போக்குகளும் அந் நம்பிக்கையை உடைப்பதாகவே உள்ளன.

எனவே, தமிழ்நாட்டுக் கோரிக்கையை நாம் உடனடியாக எழுப்பியாக வேண்டும். அதை இங்குள்ள தமிழினக் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து வெளிப்படுத்தியாக வேண்டும். இதற்

Scanned with CamScanner

காக நாம் எந்த நிலையிலும், யாருடனும் ஒன்றிணைய இரு கைகளை நீட்டி அணியமாக உள்ளோம். இந்தக் கோரிக்கைதான் இந்திய அரசை உடனடியாகத் தமிழீழத் தீர்வை நோக்கி நடையிடச்செய்யும். உந்து வேகத்தைக் கொடுப்பதாக இருக்கமுடியும்! தமிழ்நாட்டில் இப்படியொரு கோரிக்கை, இலைமறை காயாக இருப்பது நடுவணரசுக்கும், இராசீவ் காந்திக்கும் தெரியும். இருப்பினும் அது, வெறும் குரல் கோரிக்கையாகத்தான் இருக்கிறது என்பதாலும், அதைக் கைவைத்துப் பெரிதுபடுத்தக் கூடாது என்னும் தந்திர உத்தியாலும், இதுவரை, எந்தவகையான நடவடிக்கை எடுக்கவும் அவர்கள் முன்வராமல் இருக்கின்றனர். ஆனால், இங்குள்ள அனைத்து இனநலக் கட்சிகளும் ஓங்கி அக்கொள்கையை ஒரு பெரும் முழக்கமாக எழுப்பும்பொழுது, அவர்கள் கட்டாயம் அதைச் செவிமடுத்தே ஆகவேண்டும். அதன்பின் அவர்களின் செயற்பாடுகள், நடவடிக்கைகள் மிகு வேகமாகத் தீவிரமடையும் என்றாலும், அத் தீவிரந்தான், தமிழீழ நெருப்பை நீறுற்றி அணைக்க ஓர் உந்து விசையை அவர்களுக்குத் தரும். இந்த அணுகுமுறை பயனளிக்குமே தவிர, எவ்வகையாலும் பயனில்லாமல் போகாது என்பதை உறுதியாக எண்ணிக்கொள்ள வேண்டும். மேலும், இந்தக்கோரிக்கை இங்கிருந்து எழுப்பப்பெறுமாயின், உலகில் உள்ள அனைத்துத் தமிழர்களின், ஒட்டுமொத்தமான விடுதலைக் குரலும் அக்கோரிக்கை முழக்கத்துடன் ஒன்றிணையும் என்பதில் ஐயமே இல்லை.

ஆனால், இங்கிருக்கும் ஏதேதோ போக்குகளைக் கொண்ட இயக்கங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமே! அஃது என்று நடக்குமோ? பொறுத்திருந்துதான் சொல்ல முடியும்!

— பெருஞ்சித்திரனார்

நம் முகவர்களுக்கு எச்சரிக்கை!

கடுமையான பொருளியல் இடர்ப்பாட்டிலும், வினையமுத்தங்களிலும் உழன்று "தமிழ் நிலத்தை" மொழி, இன, நாட்டளவில் விடுவிப்பதையே நம் உயிர்க் கொள்கையாகக் கொண்டு, கடந்த 26 ஆண்டுகளாக வந்து கொண்டிருக்கும் 'தென்மொழி இதழுக்கும், 'தமிழ் நிலம்', 'தமிழ்ச்சிட்டு' ஆகிய இதழ்களுக்கும் முகவராய் இருக்கும் நம் அருந்தமிழ் நெஞ்சங்கள் பல, நம்முடைய இக்கட்டையும், இடர்ப்பாட்டையும் செவ்வனே உணராமல் அலுவலகத்தினரும், ஆசிரியர் அவர்களும் விடுத்திருந்த மடல்களையும் பொருட்படுத்தாமல், பட்டியல் தொகைகளை அனுப்பாமலே இருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது.

இறுதியாக ஆசிரியர் அவர்கள் விடுத்திருந்த 'எச்சரிக்கை மடலுக்குப்' பின்னும், தொகை அனுப்பாமல் இருக்கும் நன்னெஞ்சங்கள், இச்செய்தியினைக் கண்டும் விடுவிக்கவில்லையாயின், இவ்விதழை அடுத்து, வருகின்ற அடுத்த 'தமிழ்நிலம்', 'தென்மொழி, 'தமிழ்ச்சிட்டு' ஆகிய இதழ்களில், அவர்களின் பெயர்களைத் தெளிவாக வெளியிடவேண்டி வரும் என்பதை, எச்சரிக்கையுடனும், வருத்தத்துடனும் தெரிவித்துக் கொள்கிறோம். — அமைச்சர்.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் திருப்பதின் உறுப்புகள்! [திருத்தசாங்கம்]

—பாவலர். இளஞ்சித்திரன்.

பச்சைப் பசுங்கிளியே! பாட்டுடையார் நம்தலைவர்,
அச்சம் அறியார் பேர் யாதாம்? சொல்! — மெச்சுந்
தனித்தமிழில் நாடு, இனம் தாம்மீட்கப் பாடும்
இனித்தபெருஞ் சித்திரனார் ஏறு. (1)

கொஞ்சும் இளங்கிளியே! கொற்றவர்நம் மேலன்பு
நெஞ்சுடையார் நாடெதுவோ? நீயுரையாய்! — விஞ்சுந்
தமிழ்வழங்கும் பண்டைத் தலைநிலமாம் அன்னைத்
தமிழ்நிலமே இவ்வுலகில் தான். (2)

செம்பவழ வாய்க்கிளியே! தேர்ந்துநமை ஆண்டுகொண்ட
செம்மலவர் ஊரெதுவோ? செப்பிடுவாய்! — கொம்பில்
பழுத்துத்தித் திக்கும் பயன்சுவைசேர் மாங்கனிகள்
பழுத்தபெருஞ் சேலமென் பார். (3)

பழவாய்ச் சிறுகிளியே! பார்த்துநமை ஆளும்
கழலார் மலைஎதுவோ? கண்டுரையாய்! — விழலில்லா
மான வினையாண்மை வீறுநிற்கும் மெய்ம்மமலை
ஆன அவர்மலையே ஆம். (4)

கூரலகு பொற்கிளியே! கூட்டிநமை ஆண்டவர்பாத்
தேரமர்ந்தார் ஆறு தெரிந்துரையாய்! — ஓரமில்லாத்
தூய்மையொடு வாய்மையுளத் தொண்டுப் பெருவெள்ளந்
தாய்மையோ டோடும் தமிழ். (5)

பட்டுடல் கிள்ளையே! பரிந்துநமை ஆட்கொண்டார்
கட்டுரையார் ஊர்திஎது? காட்டியுரை! — ஒட்பமுள்ள
வெல்லும் துணிவுடைமை தோன்றலவர் ஊர்திஎனப்
புல்லும் வியந்துரைக்கும் பேரா. (6)

கூடுகிர்க்கால் பைங்கிளியே! கோட்டமில்லா நம்தலைவர்
போருக் கெதுபடை? சொல்! பூசலில்லா — தோகுருவில்
நிற்கும் மறத்தமிழர்! நெஞ்சிலவர் கொள்கைகளே!
பற்றுமிகுந் தார்கைப் படை. (7)

தெள்ளுதமிழ்க் கிள்ளையே! தென்னவர்தம் பாட்டுணர்வால்
அள்ளிநமை ஆண்டார் முரசுரையாய்! — பள்ளத்தில்
வீழ்ந்ததமிழ் மக்கள் விலங்கறுக்க வென்றேமுன்
சூழ்ந்தவிதழ் தென்மொழியாம் சொல்.]8)

தத்தையே! நம் அண்ணல் தமிழறிஞர் மார்பாடும்
ஒத்தநறுந் தாரை உவந்துரையாய்! — அத்தனவர்
பாவல ரேறவர்கள் 'தான் தமிழன்' என்னும்தார்
ஆவலுறச் சூடும் அணி. (9)

காந்தும் மொழிக்கிளியே! காவலர்நம் மன்னவர்
ஏந்தும் கொடியை இயம்பிடுவாய்! — தோய்ந்ததமிழ்ப்
பேருணர்ச்சி ஊட்டியினம் மீட்டெடுக்கும்! செந்தமிழர்ப்
போருணர்ச்சிச் செங்கொடிகாண் பொற்பு! (10)

Scanned with CamScanner

(அட்டை 4-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

அண்மைக் காலமே, நான் தங்களைப்பற்றி ஓரளவு அறிய நேர்ந்தது. இதுநாள்வரை தங்களை அறியாதிருந்ததற்காக ஒரு தமிழன் என்ற முறையிலே நான் மிகவும் வெட்கிப் போகின்றேன். துயரம் எய்துகிறேன். என்னை அருள்கூர்ந்து மன்னிப்பீரா?

அண்ணன் திரு. இரா. பாவாணன் (இரா. முத்து) அவர்களே தங்களை நான், அறிய உதவி புரிந்தவர். (அவர்க்கு என் நெஞ்சார்ந்த நன்றி). அவர்கள் தங்கள் பெயரை எனக்கு அறிமுகப் படுத்தி வைத்ததன் முகத்தான், நான் (புதுக்கோட்டை) நடுவண் நூலகம் சென்றபோழ்து, திரு தேவநேயப் பாவாணர் தம் நூல் கண்டேன். அதனை எடுக்க முயற்சி செய்யும் போதே-தங்களின் 'கனிச்சாறு' என் கண்களில் பட்டது. உடனே அந்நூலை எடுத்துப் படித்தேன். (படித்துக்கொண்டு இருக்கிறேன்). அப்பப்பா! நான் மூழ்கியேவல்லவா போய்விட்டேன்-கனிச்சாற்றில்!

தமிழுக்காகவும், தமிழ் இனத்துக்காகவும் தாங்கள் படும் மனத் துயரங்களைப் புரிந்துகொள்ள முடிந்தது. இடையிலேதான் அண்ணன் பாவாணன் அவர்கள் தங்களின் 'தென்மொழி' மார்கழித் திங்களிதழ் தந்து உங்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ள என்னைத் தூண்டினார். பின், 'வாழ்வியல் முப்பது' மற்றும், 'எண்சுவை எண்பது' போன்ற சுவைநிறை நூல்களெல்லாம் தந்து எமக்கு அறிவு புகட்டினார். தங்களின் உணர்வுகளை நான் ஓரளவு விளங்கிக் கொள்ள முடிந்தது. இன்னும் முயல்வேன். ஐயா, 'தென்மொழி'யைப் புதுகை மாவட்டத்தில் இதுநாள்வரை யாரும் முகவாண்மை எடுக்கவில்லை என்றறிந்தேன். எனக்கு வருத்தமாக இருந்தது. நான் ஓர் ஏழைதான். இருந்தாலும் எனக்குள்ள தமிழார்வம் காரணமாக முகவாண்மை நான் ஏற்றுச் செய்யலாம் என்று எண்ணியுள்ளேன். அதற்கான முகவாண்மை விளக்கங்களையும், மேலான அறிவுரைகளையும் எதிர்நோக்கிக் காத்திருக்கிறேன். பின்னர் படிப்படியாகத் தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டு இதழ்களில் கவனம் செலுத்தலாம் என்று எண்ணியுள்ளேன். முதலில் 150 இதழ்கள் விற்பனை செய்யலாம் என முடிவு செய்துள்ளேன். தங்களுக்கு என்னால் இயன்ற உதவி-தமிழுக்கு நான் செய்ய முனையும் சிறு தொண்டு! நன்றி - இப்படிக்கு, தங்களின் உண்மையுள்ள, — சி. குமார், க.இ.-புதுக்கோட்டை

0. 1104. பேரன்பு வாய்ந்த பாவலரேறு அவர்கட்கு வணக்கம். நலம்சூழ்க. கடந்த 7-7-85-இல் மணப்பாறையில் அறிவுச் செல்வன் திருமண விழாவில் மாலையில் தாங்கள் கலந்துகொண்டு இல்லறவியல் பற்றி உரையாற்றியது மணவை மக்கட்குப் பெரிதும் வியப்பும், புதுமையும், விழிப்பும், களிப்பும் ஊட்டியது. மணவிழா அழைப்பில் அன்று காலை நிகழ்ச்சியில் தாங்கள் கலந்து கொள்ளவிருப்பதாகத் தவறாகக் குறிக்கப்பெற்றதால் மக்கள் ஆயிரக்கணக்கில் குழுமியிருந்து பின் ஏமாற்றத்திற்குள்ளானார்கள்.

இவ்வேமாற்றத்திற்கு மணவிழா விட்டினரே பொறுப்பேற்க முடியும்.

நிற்க! அன்றிரவு நடைபெற்ற நம் உ: த: மு: க: மணவை வட்டக்கிளைத் தொடக்கவிழா பொதுமக்கள் உதவியாலும், வெளியூர் அன்பர்களாலும், குறிப்பிடத்தக்க உள்ளூர் இளைஞர்களாலும மிகவும் எழுச்சியான முறையில் நடந்தேறியது. ஆரவார மிக்க அரசியல் மேடைகளை அடிக்கடி கண்டு அலுப்புற்றுக்கிடந்த மக்கள் தமிழின மேம்பாட்டிற்காகத் தாங்கள் உரைத்த உரை நலம் கேட்டு உண்மையிலேயே மகிழ்வும் உணர்வும் பெற்றார்கள் என்றால் மிகையில்லை, 'பாவலரேறு அவர்கள் ஓர் இரண்டாம் பெரியார்' என்று சிலரும், 'எம் வாணாளில் இதுபோன்ற உரையைக் கேட்டதில்லை' என்று சிலரும், 'மீண்டும மீண்டும் இது போன்ற கூட்டங்களை ஏற்பாடு செய்யுங்கள்' என்று சிலரும் என்னிடம் கூறியதைக் கேட்டு உள்ளப்பேருவகை கொண்டேன். தம் சொந்த நலனுக்காகப் பதவியை விரும்புவாரும் உழைக்க முன்வராமல் ஒதுங்கியிருந்துவிட்டு மேடையில் ஏறிநின்று மிகு புகழ்பெற விரும்புவாரும், வாழ்க தமிழ் என்று வாய்ப்பந்தல் போட்டு நடிப்பவர்களும் சூழ்ந்த போலிமை உலகியலில், உண்மையாகவும் திண்மையாகவும் முப்பதாண்டுக்காலம் ஒப்பில்லாத தமிழ்த்தொண்டாற்றும் ஒரு தனித்தமிழ் அரிமாவை அதன் எழுச்சி முழக்கப்பேரொலியை, உண்மை உணர்வுடன் ஒத்துழைத்த ஒருசில உள்ளங்களின் துணையால், மணப்பாறைப் பகுதியில் அறிமுகம் செய்துவைக்கும் வாய்ப்புப் பெற்றதைப் பெரும் பேறாகக் கருதுகின்றேன். பல்லூழி வாழ்க. நன்றி.

அன்பன் — புலவர். நாவை. சிவம், மணவை.

சொல்லாய்வறிஞர் **ப. அருளி** அவர்களின்

புதிய, அரிய சொல்லாராய்ச்சி வெளியீடுகள்!

தமிழ், சமற்கிருதம் மற்றும் பிற இந்திய மொழிகளின் ஆராய்ச்சி நிறுவனத்தில் அருளி ஆற்றிய மொழியியல் உரைகள்!

ஐந்து தொகுதிகளாக வெளிவந்துள்ளன!
ஒவ்வொரு தொகுதியும் விலை உரு: 20.

ஐந்து தொகுதிகளும் சேர்த்துத்தான்
விற்பனைக்குக் கிடைக்கும்!

உருபா 110 விடுப்பவர்களுக்கு நூல்கள் பதிவஞ்சலில்
விடுக்கப் பெறும்!

பிற விளக்கங்களுக்கு: 'தென்மொழி, சென்னை 5.

தமிழ்மக்கள் புரிந்துகொண்ட அளவுக்கு நீங்கள் புரிந்துகொள்ளவில்லை!

பெருமதிப்பிற்குரிய பாவலர் பெருஞ்சித்திரனார் அவர்கட்கு வணக்கம் பல!

நான் கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, அரிமழம் உலகத் தமிழ்க் கழகச் செயலராக இருந்தேன். 'தென்மொழி' முகவராகவும் இருந்தேன். அவ்விதழ் சரியாகத் தொடர்ந்து கிடைக்கப் பெறாமையால், முகவராகத் தொடரவில்லை. எனினும் நான் காசு கொடுத்து வாங்கிப் படித்த அல்லது படிக்கும் இதழ் 'தென்மொழி' மட்டுமே. அரிமழம் தமிழ் மன்றச் செயலராக இருந்து 'ஆசைகுயிறு' குடந்தை ப. சுந்தரேசனார் அவர்கட்கு பணி விழா, குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடத்தி, நாடா, வாழ்த்துப் பட்டி மற்றும் பணமுடிப்பும் வழங்கினோம். இச்செய்திகளை ஏதோ பெருமை சேர்க்கச் சொல்லவில்லை. என்னை, என் தமிழ் உணர்வை ஒரு சிறிது புரிந்துகொள்ளவே குறிப்பிடுகிறேன். நிற்க,

தாங்கள் ஒருகாலத்தில், "அருட்செல்வர். (கருணாநிதி) ஆட்சியை அரணிட்டுக் காப்போம்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதியது நினைவிருக்கலாம். ஆனால், தாங்கள் இன்றைய ம. கோ. இராமச்சந்திரன் அவர்கள் அரசைக் காக்க அணியமில்லை என்பது தெளிவு. காரணியம் இராமச்சந்திரன் தமிழரல்லர்; அவரது ஆட்சியும் தமிழராட்சி அன்று என்ற முடிவு. காய்தல் உவத்தலின்றி நடுநிலையுடன் சிந்திப்பார்க்குக் கருணாநிதி ஆட்சியினைவிட, இராமச்சந்திரன் ஆட்சியில்தான் தமிழ் நலம், தமிழர் நலம், ஏழை-எளியவர் நலம் சிறந்துள்ளன என்பது தெளிவு. இதற்குச் சான்றாக, நீண்டதொரு பட்டியலையே தரமுடியும். இங்கு இடமின்மை கருதி விடுகிறேன். இவ்வகை நலஞ்சிறக்க வேண்டுமேல் நடுவண் மாநில உறவுகளும்-அண்டை மாநிலங்களின் உறவுகளும் சீராக இருக்கவேண்டும். அவ்வகையில் இராமச்சந்திரன் ஆட்சி, அண்டை மாநிலங்களின் உறவுகளை, அஃதாவது தென் மாநிலங்களின் உறவுகளைச் சீராகவும் சிறப்பாகவும் வைத்துக் கொண்டுள்ளது. நடுவண் அரசும் நம்மை மதிக்கவும், நம் கோரிக்கைக்கு எளிதில் செவி சாய்க்கவும் அணியமாக வேண்டியுள்ளது. கருணாநிதி போல் எடுத்தேன்-கவிழ்த்தேன் என்று இறுமாப்புடன் பேசி இவ்வகை நலன்களைக் கெடுத்துக் கொள்ளவில்லை.

'கயவர்களின் கடைசிப் புகலிடம் அரசியல்' என்பார்கள். தங்களைப் போன்ற மொழிப்பற்றும், இனப்பற்றுமிக்க குமுகாய சீர்திருத்த அறிஞர்களுக்கு அரசியல் தேவையில்லை என்பேன். காற்றுப்போக்கில் செல்பவர் நெடுந்தொலைவு செல்ல முடியும். காற்றின் எதிர்த் திசையில் செல்பவர், நெடுந்தொலைவு செல்ல முடியாது. தந்தை பெரியார் அவர்கள் போன்று எந்த அர-

வந்தாலும். அந்த அரசைச் சார்ந்தும் நல்ல பல திட்டங்களை, கொள்கைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும். அதுவல்லாது ஆளுங்கட்சியை எதிர்த்தோ, எதிர்க்கட்சிகளைச் சார்ந்தோ எவ்வகைப் பயனும் காணமுடியாது. நாட்டில் எதிர்க் கட்சிகளுக்குக் குறைவா என்ன ?

இற்றைத் தமிழக அரசு, ஈழத் தமிழர்பால் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்வதாக நாட்டு மக்களிடம் ஒரு போலித் தோற்றத்தை நிறுவ முயல்கிறீர்கள். ஓர் அன்பர் தங்கள் இதழில் ஈழத் தமிழ்ச் செய்திகளைப் பார்ப்பனச் செய்தித் தாள்கள் இருட்டடிப்புச் செய்வதாகவும் எழுதினார். பார்ப்பனருக்காகப் பரிந்து பேசுவதாகக் கருதக்கூடாது. நல்லது யார் செய்தாலும் போற்ற வேண்டும். அதுதான் தமிழ்ப் பண்பு. பார்ப்பனச் செய்தித்தாளான 'தினமணி'யில்தான் ஈழச் செய்திகள் செம்மையாகவும், சிறப்பாகவும் வந்து கொண்டிருக்கின்றன. ஏன்? ஒரு தொடர் கட்டுரையே வருகிறது. தமிழன் செய்தித் தாளில் ஈழத்தை முழுமையாகப் புரிந்துகொள்ளச் செய்திகள் உண்டா ? எம் தலைவர் தந்தை பெரியார் அவர்கள் "பூணூல் அணிந்த பார்ப்பனர்களை விட, பூணூல் அணியாத பார்ப்பனர்கள் மிக மிக ஆபத்தானவர்கள்" என்றார். அஃது இற்றைத் தமிழர்பால் எவ்வளவு உண்மை !

இங்கு ஈழத் தமிழர்பால் இருவேறு கருத்துக்கொண்டோர் நம்மில் யாருமிலர். ஆனால், அங்கு பல்குழுவும் பாழ் செய்யும் உட்பகையு மிக்கவர்களாய் அழிகின்றார்கள். தமிழீழத்தை நாம் காக்க வேண்டாம், அவர்கள் ஒன்றுபட்டால் உண்டு காப்பு, ஒன்றுபடுவார்களா? அப்பப்பா! எத்தனைத் தலைவர்கள்! எத்தனை அமைப்புகள்! எத்தனைப் பிரிவுகள்! எத்தனைப் பிளவுகள்! இவையெல்லாம் ஈழத்தமிழர் ஒற்றுமைக்கு அல்லது தமிழர் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டா என்ன? இவர்கள் கையில் தமிழீழத்தைக் கொடுத்தால், குரங்குக் கையில் கொடுத்த பூமாலையென அழிந்துவிடாதா? இலங்கைச் சிங்கள அரசு ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டு, படுகொலைகளைக் கேட்டுக் கற்பழிப்புகளைக் கேட்டுத் துடிக்கிறோம். தமிழக அரசும் துடிக்கிறது. நம்மைப் புறந்தள்ளி, நம் அரசு ஈழத் தமிழர்களுக்காகப் படிப்பு வசதி, பண வசதி, வீட்டு வசதி, நாட்டில் இசைவில்லாது நடமாட, பயிற்சி பெற வசதி, (அவர்களுக்குள் பொறுமை பட்டுச் சாலைகளில் ஒருவருடன் ஒருவர் சுட்டுக்கொள்ளச்) சாலை வசதி எல்லாம் வழங்கியுள்ளோம்: நம் அரசின் முயற்சியால், செலவால் பூடான் தலைநகர் 'திம்பு'வில் உடன்பாட்டுப் பேச்சும் நடைபெறுகிறது. இதை விட நாம் என்ன செய்யவேண்டும் ? கிழக்கு வங்கத்தில் இந்தியா தலையிட்டதுபோல, இலங்கையிலும் இந்தியா தலையிடவேண்டும் என்பது நம்மனோர் எண்ணம். இத்தகைய படைத்துறைத் தலையீட்டினை ஈழத்தமிழர்களே விரும்பவில்லையே. இன்று இந்த ஈழத் தமிழர்களுக்காக நாம் பரிந்து

பேசுகிறோம், வரிந்து கட்டுகிறோம். ஆனால், இந்த ஈழத் தமிழர்கள்தாம் இலங்கைவாழ் இந்தியத் தமிழர்களை வெளியேற்றவும். சாத்திரி திருவாட்டி பண்டாரநாயகா ஒப்பந்தம் ஏற்படவும் காரணியமாக இருந்தவர்கள்.

இன்று இந்த ஈழத் தமிழர்களுக்காக முதலைக்கண்ணீர் வடித்து நாடகமாடும் கருணாநிதி, அன்று தமிழக முதல்வராக இருந்த போது, யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. மாநாட்டுப் பந்தலுக்குள் சிங்களக் காலிகள் மின் ஊர்திகளை விட்டுப் பதினேழு தமிழர்களைக் கொன்றனர். பச்சிளங் குழந்தையைக் கொதிக்கும் தார்ப் பானைக்குள் விட்டு மகிழ்ந்தனர். கருணாநிதி சட்டமன்றத்தைக் கூட்டி, ஒரு கண்டனத் தீர்மானமாவது போட்டதுண்டா? இத்தனைக் கொடுமைக்கும் உரியவரான சிரிமா பண்டாரநாயகா, அன்று இந்தியா வந்தபொழுது சென்னை வானூர்தி நிலையத்தில் முதல் மாலை போட்டு வரவேற்றார். மற்றும் அன்று ஈழப் போராளிகளான குட்டி மணியும், செகனும் சிரிமாவின் கொலைக் குற்றத்திற்குத் தப்பி வந்து, வேதாரணியம் காட்டில் தலைமறைவாகத் திரிந்தபோது, வெளிநாட்டின் இசைவுச்சீட்டு இல்லாத குற்றத்திற்காக, அவர்களைப் பிடித்து இந்தியத் தலைமை மூலம் இலங்கை அரசிடம் ஒப்படைத்தார். இன்று கேட்டால், அவர்கள் அவ்வளவு புகழ்பெற்றவர்கள் என்பது அப்பொழுது எனக்குத் தெரியாது என்று கூறுகிறார்.

இத்தகைய எட்டப்பர்தாம் தமிழகத்துக்குரிய கச்சத் தீவையும், இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுத்தார். 1924 இல் ஏற்பட்ட காவிரி ஒப்பந்தத்தை, 1974 இல் புதுப்பிக்கத் தவறியதும் இந்தக் கரிகால் பெருவளத்தான் தான். இப்பொழுது கேட்டால், 'ஏதோ இருட்டில் கையொப்பம் கேட்டார்கள், போட்டுவிட்டேன்', என்று கூறுகிறார். பெங்களூர் குளுமையில் தம்மை மறந்திருந்தார் போலும். அதற்காக அன்று இந்திய உயரற மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அதையும் அன்று இந்திரா காந்தியுடன் கொண்டிருந்த கொள்கை உறவின் காரணியமாகத் திரும்பப் பெற்றுவிட்டார். இத்தனைத் தவறுகளில் ஒன்றையாவது, இன்றைய முதல்வர் இராமச்சந்திரன் செய்திருந்தால், சும்மா விடுவாரா? "பாரீர்! பாரீர்! இந்த மலையாளி இராமச்சந்திரன் ஆட்சியில் தமிழர் நலம் கெடுவதை-உரிமை போவதைப் பாரீர்!!!" என்று ஆர்ப்பரிப்பார்! உங்களைப் போன்ற தமிழாய்ந்த தமிழர்கள் எல்லாம் கருணாநிதி என்ன தவறு செய்தாலும் கண்டிக்கவே மாட்டீர்கள். தமிழன் அல்லாத இராமச்சந்திரன் நன்மை செய்தாலும் புகழவும் மாட்டீர்கள். உங்களைப்போன்று இல்லாமல் படிக்காத ஏழை மக்கள் இருக்கிறார்களே, அவர்கள் நன்மை எது? தீமை எது? என்பவையெல்லாம் நன்றாகவே அறிந்து வைத்துள்ளார்கள்

போலும். பொதுத் தேர்தல் மூலம், நன்றாகவே தீர்ப்பளித்து விடு கிறார்கள்! கடந்த 1980 பொதுத் தேர்தலிலே தி.மு.க.-வும், இந்திரா காங்கிரசும் ஓர் அணியிலும், அண்ணா தி. மு. க. ஓர் அணியிலும் நின்றனர். மக்களவைத் தேர்தலிலே, இந்திரா அணியை வெற்றிபெறச் செய்த மக்கள், மாநிலச் சட்டமன்றத் தேர்தலிலே அண்ணா தி.மு.க. அணியை வெற்றிபெறச் செய்தனர். யாரை எங்கே, எப்படி வைப்பதென்று நம் மக்கள் புரிந்துகொண்ட அளவிற்கு நாம் புரிந்து கொள்ளவில்லை என்பதற்கு இதைவிடச் சான்று வேண்டுமா? அன்புடன்,

— சி. தமிழரசன், அரிமழம். (புதுகை)

விடுதலைச் செல்வன் வாழ்க!

கடந்த 12-5-85 அன்று, ஈரோட்டில் நடந்த, உ.த.மு.க. மாநிலச் செயற்குழுக் கூட்ட நிகழ்ச்சியில் ஈரோடு நகர உ.த.மு.க. தலைவர் புலவர். மு. அரசமாணிக்கனார் க.மு அவர்களின் மகன் திரு. ஈ. எம். ஆர். சௌந்தரபாண்டியன் — சாவித்திரி ஆகிய இணையரின் முதல் ஆண் குழந்தைக்கு, முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 'விடுதலைச் செல்வன்' என்று பெயர் சூட்டிய நறுநினைவுக்காக, உரு 25/- தென்மொழி வளர்ச்சிக்குத் தரப்பெற்றது. குழந்தை விடுதலைச் செல்வன் எல்லா நலன்களும்; வளங்களும் பெற்று, நீடு வாழ்ந்து, தமிழ்மொழிக்கும் இனத்திற்கும் நாட்டிற்கும் நல்ல தொண்டாற்றிப் பெயரும் புகழும் பெற்று வாழ, தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

— அமைச்சர்

"தென்மொழி"

சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல்நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம் :	15 உருபா	35 உருபா	40 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	18 ,,	8 ,,	25 ,,
தனியிதழ் :	1-25 ,,	3-00 ,,	4.00 ,,

ஓரிதழுக்கு உருபா 2-50 மேனி முன்பணம்
கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!



1. நூல் : விருந்து (சிறுகதைத் தொகுப்பு)
தொகுப்பாசிரியர் : ": தமிழமல்லன். க. இ.,கல்.இ.
வெளியீடு : தனித்தமிழ்க் கழகம், தட்டாஞ்சாவடி, புதுச்சேரி-9.
பக்கம் : 96; விலை : உருபா 5

தி. நா. அறிவுஒளி, த. பழமலை, க. தமிழமல்லன், சு. நற்குமரன், சு. குறளேந்தி, த. தமிழரசி, பாவலர் கோ தேவமைந்தன்,

---

துலங்கிடும் பொற்காலம்!

— வள்ளிகேள்வன் —

பாவாணர் சென்றபின்பு
சொல்லியலை ஆய்வுசெய்ய
காவலர்யார் என்றுகேட்ட துண்டு—அருளி!
காவலராய் வந்துவிட்டார் இன்று!

மருள்மதிகொள் பொய்யறிஞர்
ஆய்வியலை உழப்புகையில்
அருளி, அடல் வேங்கையென வந்தார்-மொழி
ஆய்வினிலே உண்மைநிலை கண்டார்!

நாவில்தவழ் தூயதமிழ்!
ஆய்வுகளில் தெளிவுடைமை!
நடுவுநிலை பிறழ்தலிலாப் பண்பு-அருளி!
நற்றமிழை மீட்டெடுப்பார் நம்பு!

காட்சியிலே எளிமை! அவர்
பேச்சினிலே இனிமை! உள
மாட்சியிலே கள்ளமிலாத் தன்மை-மொழித்
தேர்ச்சியிலே பேரறிஞர் உண்மை!

'தகுதி' எனும் சொற்குடும்பம்
தகைமையுடன் ஆய்வுசெய்து
தகுதியைமெய்ப் பித்தமிழ் அறிஞர்!-அருளி!
அகவையிலே அகமதிலே இளைஞர்!

தமிழூறு செய்திடும்பொய்
ஆய்வாளர் முகத்திரையைத்
தமிழூர் கிழித்தெறியும் காலம்-செந்
தமிழ்முதன்மை துலங்கிடு பொற்காலம்!

சக்திப்புயல், அரி, கி. தமிழ்மாறன், செயசீலன் ஆகியோர் எழுதிய நன்கொடை, நினைப்பு, ஏமாற்றம், வாழ்த்துங்கள், எல்லோரும் மாந்தர்களே, விருந்து, நெஞ்சிலே பூத்த நிலவு, நல்லதற்குக் காலமில்லை, இது என்ன தகுதி, நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள், முடிசூடா மன்னன், பரிசு-ஆகிய பன்னிரண்டு சிறுகதைகளைக் கொண்டது; இந்நூல்.

தூயதமிழில் சிறுகதை இலக்கியத்தை வளர்க்க வேண்டும் என்னும் நல்ல நோக்கத்துடன் வெளியிடப்பெற்ற நூல் இது, இருப்பினும் சில வட சொற்கள் அங்கங்கே தென்படுகின்றன.

கரங்கள், பாவம் (பக் : 83)
வார்த்தை, வயது, சோதனை, ஆரம்பித்தது, பிச்சை, தர்மம், அனுதை (பக் : 84, 85, 89)

இதிலுள்ள பல கதைகள் தூயதமிழிலேயே இலங்குகின்றன. தூயதமிழில் கதைகள் எழுத முடியாது-என்னும் கூற்றை இந்நூல் ஒருவாறு முறியடித்திருக்கிறது.

கதைகளில் ஒன்றிரண்டே கருத்தோட்டம் உடையன. ஒவ்வொரு கதையும் குமுகாயப் பார்வையில் ஒவ்வொருகோணத்தைப் புலப்படுத்துகிறது. தி. நா. அறிவுஒளியின் 'நன்கொடை' இயல்பான நடைமுறையுடன் திகழ்கிறது. இன்றைய அரசியல், குமுகவியல் உண்மைகள் படம்பிடித்துக் காட்டப் பெறுகின்றன.

'ஏமாற்றம்' நடுத்தரக் குடும்பங்களில் உள்ள இளைஞர்களின் நிலையை உணர்த்தும் கதை. 'நெஞ்சிலே பூத்த நிலவு' நன்றாகத் தொடங்கி, இயல்பாக நடந்து 'சடக்'கென முடிவடைகிறது. இறுதிக் கதை சிறு மாணவி ஒருத்தியின் பரிசு பெறும் ஆசை உணர்வுகளை அள்ளித் தெளிக்கிறது.

மொத்தத்தில் தூயதமிழுக்கு ஓரளவு கிடைத்த வெற்றி, கதைகளுக்குக் கிடைக்கவில்லையே! இரண்டும் இணையும் பொழுதே நாம் கொண்ட தூயதமிழ் இலக்கியக் கொள்கை வெற்றிபெற முடியும். முயற்சி சிறந்தது; பயிற்சி தேவை!

உ: நூல் : தமிழ்ப்பெரும் புலவர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை
ஆசிரியர் : அவர் திருமகனார் பேரா. இ. சு. முத்துச்சாமி.
வெளியீடு : மக்கள் இலக்கியப் பாசறை, சங்கரன் கோவில்.
கிடைக்குமிடம் : பாரி நிலையம், சென்னை-8.

பெரும்புலவர் இ. மு. சுப்பிரமணியனார் அவர்களின் சுருக்கமான வரலாற்று நூல் இது. வரலாற்று நாயகரின் திருமகனார் எழுதியது. நூலின் பிற்பகுதியில் பாவேந்தர் பாரதிதாசன், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், முதலியோர் வழங்கிய பாராட்டுப் பாக்களும், அறிஞர்கள் பலரின் மதிப்புரைகளும் பின்னிணைப்பாகச் சேர்க்கப் பெற்றுள்ளன.

செந்தமி ழுக்குத் தீதென்றால்
சிறுகுறும்புப் பார்ப்பனர்கள்
மூந்து வார்கள் அவர்கள்தம்
மூக்கறும்படி செய்யும்

தந்தை பெரியார்க் கொருதுணைவன்
  தமிழன் குடியரசு ஏடுதனில்
சந்திர சேகரப் பாவலனைச்
  சாய்த்தான் பார்ப்பார் கொட்டத்தை!

இராமா யணத்தில் இழிவெல்லாம்
  எத்துப் புலவர் கூற்றெல்லாம்
பராவி வணங்கும் வால்மீகி
  பல்லைப் பிடித்துக் காட்டியவன்!
வராத தீமை வந்ததெலாம்
  வழிபட் டேற்ற கம்பனவன்
திராவிடத்தில் செயுந் தீமை
  தெரியச் செய்தான் இ.மு.சு!

—என்பது பெரும்புலவரைப் பற்றிய பாவேந்தர் மதிப்பீடு!

ஐந்திறக் கணியன் அருங்கலை வல்லோன்;
தமிழ மருத்துவம் தவலறத் தெரிந்தோன்;
தமிழுக் கேதனைத் தத்தம் செய்தோன்;
தமிழர் வாழ்வே தனதெனக் கொண்டோன்!

—என்று மொழிஞாயிறு பாவாணர் இ.மு.சு.வைப் பாராட்டுகிறார்.

வரலாற்று நாயகர் இ. மு. சுப்பிரமணியனார் மிகப்பெரும் புலவராக விளங்கியவர். தமிழ்ப் புலமையுடன் மருத்துவம், கணியம், சமயம், வரலாறு முதலியவற்றிலும் தேர்ந்த புலமை பெற்றவர். எந்தக் கருத்தையும் தெளிவாகவும் துணிவாகவும் கூறுபவர். 'பாரதியார் பாடல்களில் பிழைகள் நிறைந்திருக்கின்றன' என்று கூறியவர் அவரெனில், அவர் துணிவுக்கு வேறு சான்று தேவையில்லை. தீமைகளை எதிர்த்துப் போராடுபவர். பெரியார் பற்றாளர்; தன்மான உணர்வுள்ளவர். இந்தியை வன்மையாக எதிர்த்தவர். தமிழின உணர்வு மிக்கவர். சிறந்த சிந்தனையாளர். வரலாற்றாராய்ச்சியில் தனியிடம் பெற்றவர். கணியக் குறிப்புகளை வைத்துச் சிலப்பதிகாரக் காலத்தை உறுதி செய்தவர். பார்ப்பனீயத்தையும் வடமொழிக் கலப்பையும் வன்மையாகக் கண்டித்தவர். அதனால் விளம்பரமில்லாமல் இருந்தவர். சைவசமய உணர்வு மிக்கவர்.

இப் புலவர் பெருமானின் வாழ்க்கை வரலாற்றைத் தொடங்குகையிலேயே, இவர் திருமகனாகிய பேரா. இ. சு. முத்துச்சாமி அவர்கள் இவ்வாறு தொடங்குகிறார். 'உழைப்பால் உயர்ந்தவர்; நிழலில் வளர்ந்த பயிர் அல்லர்; வெயிலில் வாடி வேரூன்றிய மரம்!'

இவருடைய வரலாற்றைச் சுருக்க விளக்கமாகத் தருகிறது இந்நூல்; தமிழுக்காகவும் தமிழினத்துக்காகவும் உழைத்த பெருமக்கள் வரலாற்று வரிசையில் இவர் வரலாறும் கட்டாயம் படித்துணர வேண்டிய ஒன்று. 0

(24-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)
('குளியல் ஓர் ஆய்வு' கட்டுரையில் 24-ஆம் பக்கத்திற்குப் பின் தொடர்ந்து இதைப் படிக்க வேண்டுகிறோம்.

இவர்களின் காலம் சற்றேறக்குறைய 5,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். சிந்து சமவெளி நாகரிகம் ஒரு நகர நாகரிகமாகும். இஃது ஆரிய நாகரிகத்திற்கு முற்பட்டது. ஆரியத் தொடர்பில்லாத ஒரு தனித்த நாகரிகத்தைச் சார்ந்ததாகும். ஈராசு பாதிரியார் போன்ற வல்லுநர்கள் இதைத் 'திராவிட நாகரிகம்' எனவும் கருதுகின்றனர்.

சிந்து சமவெளியில் ஆரியர் வருமுன்னர்க் குடியேறி 'சிந்து' எனப் பெயரிட்ட மக்கள் தமிழரே எனப் பாவாணர் அவர்களும் தம், 'தமிழர் வரலாற்றில்' குறிப்பிட்டுள்ளார்.

ஆதலினால், இற்றைக்கு 5 000 ஆண்டுகளுக்கு முன்னரே குளியலறை, நீச்சல் குளம் அமைத்துக் குளித்தின்புற்றவர் தமிழரே என்பது வெளிப்படை.

இதற்கும் முன்னர், ஏறக்குறைய கி.மு. 10,000-இல் முதற் கழகம் (முதற் சங்கம்) அமைத்து நாகரிகமுடன் வாழ்ந்த மக்கள் தமிழரே! அதுவே கரும்பொன் எனப்படும் இரும்புக்காலம் ஆகும்.

அதற்கும் முற்பட்ட காலம் தமிழரின் வெண்கலக் காலம் (கி. மு. 15 000) ஆகும். அக்காலத்திற்கும் முற்பட்ட காலம் செம்புக் காலம் (கி. மு. 30,000). அதனினும் முந்திய காலம் பொற்காலம் (கி. மு. 50,000) ஆகும். அக்காலத்தில் வாழ்ந்து சிறப்புற்றவர்களும் தமிழரே; என்னும் கருத்துகளையும் காலவரையறையுடன் பாவாணர் அவர்கள் தம் 'தமிழர் வரலாறு' என்னும் நூலில் குறிப்பிடுகின்றனர்.

பொற்காலமாகிய கி. மு. 50,000-இல் வாழ்ந்து நற்றமிழ் மக்கள் பொற்குடம் கொண்டு நீரெடுத்து உடல் வெப்பம் தணிக்க நிதம் குளித்தும், மகிழ்வூட்டும் இயற்கை வளம் சூழ்ந்த நீரூற்றும் அருவிகளிலும், ஆறுகளிலும் மெய்சிலிர்க்கக் குளிரூட்டும் பொய்கைகளிலும் நீராடியும் பெருமகிழ்வுற்று மனக்கவலையற்று வாழ்ந்திருப்பர் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், பொன் தோண்டி அணி செய்து, மின்னார் விரும்பும் பொன்னுடையும் உடுத்திப் பொலிவுற்ற அம்மக்கள் குளிக்கத் தெரியாமலோ இருந்திருப்பர்?

எனவே, தோராயமாகவே குறிப்பிட்டாலும் இற்றைக்கு 50,000 ஆண்டுகட்கு முன்னே குளித்துப் புறத்தூய்மை கண்டும், அகத்தூய்மை அறிவாற்றல் கொண்டும் வாழ்ந்தவர்கள் உலக முதன் மக்களாகிய தமிழரே என்பது நடுநிலைபாளர் ஒப்பும் உயர்கருத்தாம்!

இத்தனை வரலாற்று இலக்கிய இலக்கணச் சான்றுகளை மறந்து அல்லது அறியாமல் இருந்து, 'குளியல் கி பி. 4-ஆம் நூற்றாண்டிலேயே சிறப்பாக (பிரபல்யமாக) இருந்திருக்கிறது என்று கூறுவது எத்துணை வருத்தத்திற்குரியது ஆகும்! எத்துணைச் சிறுமைக்குரியதும் ஆகும்! அதுவும் உரோமாபுரிச் சான்றுகள் தாம் அதனை மெய்ப்பிக்கின்றனவாம்! என்னே நம்மவரின் கருத்து விளக்கங்கள்! நம் இலக்கண இலக்கியங்களைப் பெருமைப்படுத்தும் போக்குகள்! பொறுத்திருந்து பார்ப்போம்! இன்னும் எத்தனையோ?

நாடகம் தொடர் — 3

கொய்யாக்கனி

நாடக ஆக்கம் : அதியமான்

[பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் பாவியம்]

காட்சி — ௬

உறுப்பினர்கள் : 1. கிழவர், 2: வள்ளி, 3: கண்ணையன்.

இடம் : கிழவரின் குடில் :

கிழவர் : (தனிப்பேச்சு, மழைக் காற்று வீசுகிறது.) அய்யோ மழை வருகிறதே. வள்ளி வரவில்லையே. பெண்கள் தனியாக வருங்காலமா இது? மரத்தில் சேலையைக் கட்டிவைத்தால்கூட பெண்ணென்று பார்க்குங் காலமிது. மாந்தன் விலங்காண்டிகளாய் அலைகின்றனர். நாட்டுக்கு உரிமை கிடைத்ததுதான். எவனும், எதையும் எப்படியும் செய்யலாம் என்றாகிவிட்டது. கேட்பாரே இல்லை. காவலரோ (Police) குற்றங் குறைவதற்கில்லை; குற்றங்களைச் செய்வதற்குத்தான் இருக்கிறார்கள். கையூட்டு வளரும் இடமாக இருக்கிறது. அவர்களே குடிக்கிறார்கள். இவர்களா குடிப்பவனைத் திருத்தமுடியும்? ங்... பணம் இருந்தால் களவாடலாம். கற்பழிக்கலாம் கொலை செய்யலாம். ஒழுக்கமுடையவனுக்கு மதிப்பே இல்லை. ஒழுங்கற்றவனிடம் பணம் இருந்தால் அவன்தான் பெரியவன். அவன்தான் சட்டமன்ற உறுப்பினன். பணத்தைச் சேர்க்க எந்தத் தவற்றையுஞ் செய்யலாம் என்றாகிவிட்டது. என்ன செய்வது. தட்டிக் கேட்பவனை முட்டாள் என்று மக்களும் நினைக்கிறார்கள். ங்... என்றைக்கு இந்த நிலை மாறுமோ? தெரியவில்லை. என் வள்ளி என்ன ஆனாளோ? காலா காலத்தில் அவளுக்கு என்று ஒருவன் வருவானென்றால் வருபவனெல்லாம் மரக்கட்டையாக இருக்கிறான்! அக் காலத்தில் குடிக்காதவன் நல்லவன். இக்காலத்தில் குடிக்கத் தெரியாவிட்டால் அவனை இளைஞனே நாகரிகம் தெரியாதவன் என்று கூறுகிறார்கள். இந்தக் குழப்பச் சூழலில் என்ன செய்வது? பணமும் இல்லை. பம்பரம் இருக்கிறது; சுற்றிவிடக் கயிறு இல்லையே (வீட்டிற்குள் போய்ப் பார்த்து) தீப்பெட்டியைக் காணவில்லை, விளக்கேற்ற. நில ஒளிதான் ஏழைகளுக்கு வெளிச்சம் (திண்ணையில் படுத்துக்கொள்கிறார். மழையும் நின்று விட்டது.)

வள்ளி : (வந்து கதவைத் தட்டி) தாத்தா, தாத்தா.

கிழவர் : (பதறி எழுந்து) இதோ வந்துவிட்டேனம்மா (கதவைத் திறந்து) மழையில் எங்கிருந்தாயம்மா? ஒரே அச்சம். எனக்கு

Scanned with CamScanner

வள்ளி : (அழுதுகொண்டே) தாத்தா, இந்த நாட்டில் பெண்ணாக யாரும் அலையக்கூடாது. இங்குள்ள இளைஞர்களுக்குத் தாய், தங்கை இருப்பதாய் என்னால் உணர முடியவில்லை. தாத்தா. மழைக்கு ஒதுங்க ஒரு வீட்டின் திண்ணையில் தங்கினேன். வீட்டிற்குள் பெண்கள் யாராவது இருப்பார்களா? என எட்டிப் பார்த்தேன். அவ்வளவுதான் தாத்தா, சொல்லவே அச்சமாய் இருக்கிறது. கடாமீசைக்காரன், ஒருவன் என்னைத் துரத்தினான். பிடித்தான். என்னைக் கெடுக்க வீட்டிற்குள் தூக்கிச் சென்றான்.

கிழவர் : அய்யோ! கடவுளே!

வள்ளி : கடவுளா? எத்தனையோ கடவுள்கள் இந்த ஊரில் இருக்கிறார்கள். ஒரு கடவுள் அங்கு வரட்டுமே! அவர்கள் கதையைக் கேட்டால் கடாமீசைக்காரன் கதைதான். எப்படி வருவார்கள்? என்னைப் பார்த்துச் சிரிப்பார்கள்.

கிழவர் : நீ, சொல்லும் அவன், பணக்கொழுப்பால் பல பெண்களின் கற்பைக் கொத்திக் குடித்தவன். அவனை அரசும் ஒன்றுஞ்செய்யாது. எல்லா அரசியல் கட்சிகளும் அவனோடு பற்று வைத்துக் கொண்டுள்ளது. இந்த ஊர் ஆட்களும், எதற்கு இப்படிச் செய்கிறாய் என்று கேட்கமுடியாது; காவல் துறை அவன் பக்கம். கடுமையான கொடுமைகளைச் செய்து வருகிறான், கடன் கொடுப்பான். நல்லவனாகப் பேசுவான். பத்துக்குப் பல பத்துப்பணத்தை கேட்டுப்பிடுங்குவான். நாள் விடிந்தாலும், அவனுடைய கொடுமைகளுக்கு விடிவே கிடையாது. நாட்டுக்குக் கிடைத்த உரிமை அவனுக்குத்தான். எல்லா உரிமைகளையும் பெற்றுத்திரிகிறான். வள்ளி, அவன் என்னம்மா செய்தான்?

வள்ளி : நல்ல வேளையாக எவனோ ஒருவன், அவனுடைய நண்பனும் வந்தான். பிறகு உன்னைப் பார்க்கிறேன் என்று என்னை விட்டு விட்டான். நான் தப்பித்து ஓடிவந்து விட்டேன். இன்னும் என்ன செய்வானோ தெரியவில்லை.

கிழவர் : பேரிடரிலிருந்து தப்பி வந்திருக்கிறாய். சரி மறந்துவிடு; இந்தச் சில்லறைச் செயலை. வள்ளி நீ, இனி பூ. விற்பதற்குத் தெருப்பக்கம் போக வேண்டாம். பூக்களை நானே போய் விற்று வருவேன். ம்...ஒரு காளையன் வந்தால் கொடுத்து விடலாம். என் கவலையும் தீரும்! வள்ளி போய் வீட்டு வேலைகளைப் பார், போ. (வள்ளி நான்கு எட்டுப் போன பின் அவளை அழைக்கிறார்.) நல்ல நினைவு வள்ளி இங்கே வாம்மா.

வள்ளி : என்ன தாத்தா:

கிழவர் : அடா, இங்கு அண்மையில் வாம்மா, சொல்லுகிறேன்.

வள்ளி : என்ன? தாத்தா. இதோ வந்தேன். ம்...என்ன சொல்லுங்கள் என்ன?

கிழவர் : அ'தாவது வள்ளி, எனக்குச் சரியாக கண்கள் தெரிய வில்லை. அதனால், மல்லிகை, முல்லையும் மருக்கொழுந்தும் இருக்கும் இடம் சரியாகத் தெரியவில்லை; நீ தோட்டத்திற்குப் போய் அவற்றைப் பறித்தெடுத்து மாலையாகத்தொடுத்து வீட்டில் இருந்து கொண்டு விற்றுவிடு.

வள்ளி : அப்படியே செய்து வருகிறேன், தாத்தா (போகிறாள்.)

கண்ணையன் : (வருகிறான்) தாத்தா ?

கிழவர் : வா. வா. கண்ணையனா ? உன் அலைச்சலும் என்றைக்கு நிற்குமோ ?

கண் : தாத்தா. நீங்கள் நினைத்தால் நின்றுவிடும்: நினைக்க மறுக்கிறீர்களே.

கிழவர் : நான் நினைத்தால்மட்டும் போதுமா ? வள்ளியும் நினைக்க வேண்டுமே !

கண் : அவளுக்கு நினைக்கத் தெரியாவிட்டால் தாத்தா, நீங்கள் சொல்லிக் கொடுப்பதுதானே.

கிழவர் : நான் எப்படியடா சொல்லிக் கொடுப்பது? நான் நம்ம கிழவியிடம் செய்த காதல் யாவும் மறந்து விட்டதே.

கண் : தாத்தா, படம் பார்க்க வாருங்களேன். அங்கு காதலைப் பார்க்கலாம்.

கிழவர் : சீ. காதலையா காட்டுகிறார்கள், காமவெறியைக் காட்டுகிறார்கள்; காதல் என்றால் என்ன ? காமம் என்றால் என்ன? என்பதைத் தெரியாதவர்கள். அங்கு காட்டும் காதல் காட்சி காம உணர்ச்சியைத் தூண்டும். காமவெறி !

கண் : தாத்தா. அப்படியானால் காமம் கூடாதென்று கூறுகிறீர்கள்?

கிழவர் : இல்லை. காமம் என்பது அகத்தில் இருக்க வேண்டிய தொன்று. அதன் இயக்கம் காதலாக இயங்க வேண்டும். வெறியாக இயங்கினால் அ'து உட்பகை உடையது.

கண் : எப்படித் தாத்தா ?

கிழவர் : கேள். மின்சாரத்தின் தன்மை என்ன ? சொல்லு பார்ப்போம்.

கண் : தெரியவில்லையே !

கிழவர் : அ'தெப்படி உனக்குத் தெரியும்? நான் சொல்லுகிறேன். மின்சாரம் கொடுமையான செயலைச் செய்யவல்லது; அ'தாவது அதனைப் பயன்படுத்தும் முறைதவறிப் பயன்படுத்தினால் உயிரைப் போக்கிவிடும். என்ன கண்ணையா மின்சாரத்தைத் தொட்டாலே போதும் உயிரைப் போக்கிவிடும்: அல்லவா

கண் : ஆமாம்.

கிழவர் : அதைக் கம்பி வழி அனுப்பினால், அதனை நாம் பயன்படுத்தலாம். பல நன்மைகளையும் நமக்கு அது தரும் புரிகிறதா ?

கண் : புரிகிறது.

கிழவர் : அப்படிச் செய்யாமல் அதனைக் கண்டபடி ஓடவிட்டு விட்டால் உயிர்களைப் போக்கிப் பிணங்களைக் குவித்துவிடும். அதுபோலக் காமத்தைச் சீரான வழியில் செலுத்தினால் காதலாக மலர்ந்து இன்பந்தரும். கண்டபடி விட்டால் உட்பகையாக இருந்து காமங்கொண்டவனையே அது கொன்று விடும்.

கண் : அப்படியா ?

கிழவர் : இன்னுங்கேள். காமம் என்பது அசஉணர்ச்சி. அது செயலாகமாறும் திறங்கொண்டது. அஃதாவது புணர்ச்சிக்குத் தூண்டுகோலானது. அதன் இயக்கத்தை வெளியில் கூற முடியாது. கூறவுங்கூடாது. வெளியில் அதைக் காட்டினால் அருவருப்பாகத் தெரிவது மட்டுமன்று. இன்ப வெறியைத் தூண்டி ஒழுக்கத்தைக் கெடுத்துநிற்கும்.

கண் : தாத்தா, அப்படியானால் காதல் என்பது ...?

கிழவர் : காதல் என்பது அன்பின் விளைவு. உள்ளத்தோடு ஒன்றியது. உறவு கொண்டாடி இன்பந்தருவது. அவ்வுணர்வு ஒரு குறிப்பிட்ட இடத்தையே சேரும் தூய்மையானது. விலகாது. விலக்கவும் முடியாது. விலகிவிட்டால் அல்லது விலக்கிவிட்டால் அது காதல் அன்று காமவெறி.

கண் : தாத்தா, காதலை வெளியில் சாற்றலாமா ?

கிழவர் : ஆம். கேள். காதல் காட்சிகள் உடலுறவு இல்லாதது அருவருப்பற்றது உணர்ச்சியைத் தூண்டாது. வெளியிலும் சாற்றலாம். அஃது இன்பத்திற்கு இலக்கணம், என எண்ணுதல் (என்று சொல்லுதல்) பொருந்தும்.

கண் : தாத்தா !

கிழவர் : பொறு, — பொறு, சொல்லுகிறேன் கேள். காதல் காட்சிகளைப் படத்தில் காட்டலாம். காமக் காட்சிகளைப் படத்தில் காட்டினால் கேடுவரும். இப்போது காமக் காட்சிகளைத்தான் காட்டி இளைஞர்களைக் கெடுக்கிறார்கள்.

கண் : காமக் காட்சிகளைக் காட்டுகிறவர்களுக்கு இது தெரியாதா?

கிழவர் : நன்றாகத்தெரியும். பண அவாவினால், எவன் எப்படிப் போனால் என்ன ? நாடு குட்டிச்சுவரானாலும் அவர்களுக்குக் கவலையில்லை. காசுகளைப் பிடுங்க காமக் காட்சிகளே துணை யென்று செய்கிறார்கள்.

குளியல் ஓர் ஆய்வு

— புலவர். ப. எழில்வாணன், க.மு, கல்: இ.

(கடந்த கிழமை வெளிவந்த 'ஜூனியர் விகடன்' என்னும் இதழில் ('ஜூனியர் விகடன்' இதழ் : 3-28 நாள் : 10-7-85) ஒரு வாசகர் கேட்ட வினாவுக்குக் 'குளியல்' பற்றி விடையளித்தவர், நம் மனம் நோகும், வண்ணம், 'குளியல்' நாலாம் நூற்றாண்டிலேயே சிறப்பாக (பிரபல்யமாக) இருந்திருக்கிறது' என்றும், மற்றும் உரோமாபுரிச்சான்றுகளை எடுத்துக் காட்டியும் கூறியுள்ளார். பண்டைய 'சாம்ராச்சியங்களில் நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன' எனவும் கூறியவர், நமது வரலாற்றையோ நம் இலக்கண இலக்கியங்களையோ எடுத்துக் காட்டாமல் வெறுமனே குறிப்பிட்டுள்ளார்! அவர் கருத்துத் தொடர்பான உண்மையை விளக்க வேண்டி 'ஜூனியர் விகடன்' ஆசிரியர்க்கு அனுப்பி வைத்த ஓர் ஆய்வுக் கட்டுரையின் படி இது.)

குளியல் என்பது நாலாம் நூற்றாண்டிலேயே சிறப்பாக (பிரபல்யமாக) இருந்திருக்கிறது என்றும் உரோமாபுரியில் அதற்கான சான்றுகள் தொல்பொருள் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன என்றும் 'ஏன்? எதற்கு? எப்படி' என்ற பகுதியில் 'ஜூனியர் விகடன்' 3-28; 10-7-85-இல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அஃதாவது அப்பகுதியில் விடையளிப்போரால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது) அதன் விளைவாக எழுந்ததே, இச்சிறு ஆய்வுக் கட்டுரை ஆகும்.

குளியல் உரோமபுரியில்தான் சிறப்படைந்துள்ளதா? நம் நாட்டில் இல்லையா? இப்படி ஒரு வினாவை, 'மாந்தன் குளிக்கும் பழக்கம் ஆதாம் ஏவாள் காலத்திலிருந்தே இருக்கிறதா? என்ற வினாவுக்கு விடையளிக்கும் முன்பாக ஏன் எழுப்பியிருக்கக்கூடாது? நம் நாட்டுச் சான்றுகளை அதுவும் இன்பத்தமிழ் இலக்கியச் சான்றுகளை எடுத்துக் கூறினால் உண்மை மறைந்து போய்விடுமா? அன்று நம் நாட்டு அருமை பெருமைகளைக் கூறினால் நாம் சிறுமைக்குள்ளாகி விடுவோமா? நம்நாட்டு வரலாற்றை, இலக்கண, இலக்கியங்களை நாமே அறியவில்லையா? அல்லது நமக்கே அவை புரியவில்லையா? இத்தகைய வினாக்கள் மேற்கண்ட தவறான கருத்துகளால் எழத்தான் செய்யும்!

(முன் பக்கத் தொடர்ச்சி)

கண் : காமத்தின் இன்பத்தை நுகர்ந்து முடித்து விட்டீர்கள். எனவே அகவைமுற்றிய இந்நேரத்தில் அதை வெறுக்கிறீர்கள் போலும். நீங்கள் கூறும் உட்பொருள் (தத்துவம்) எனக்குப் பிடிக்கவில்லை.

கிழவர் : அதனால்தான், வள்ளிக்கு உன்னைப் பிடிக்கவில்லை.

கண் : சரி. சரி நான் ஒரு நாளைக்கு அவளிடமே கேட்டுவிடுகிறேன். வருகிறேன் (போய்விடுகிறான்.) (தொடரும்)

Scanned with CamScanner

குளியல் என்பது உலகில் முதன்முதலாக நம் தமிழ்நாட்டில் தான் சிறைப்படைந்திருக்கிறது. குளியல் அறைகளும் சிறப்பாகக் கட்டப்பட்டும் போற்றப்பட்டும் இருந்திருக்கின்றன. இக் கருத்து வலிவுடையது என்பதற்கும் உண்மையானது என்பதற்கும் கீழ்க் காணும் சான்றுகளே அடிப்படையாம்.

குளியல் பற்றிய கருத்துகள், செய்திகள் நமது இலக்கியங் களில் ஏராளமாகக் காணக்கிடக்கின்றன; எனினும்-இக் கட்டுரை யின் பக்க அளவுகள் மீறாமலிருக்க ஒருசில சான்றுகளை மட்டும் கண்டு தெளிவோம்!

உரோமாபுரியில் 4-ஆம் நூற்றாண்டில்தானே குளியல் சிறப் படைந்திருக்கிறது! செந்தமிழ் நாட்டில் சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் காலத்திலும் சிறப்பாக இருந்திருக்கின்றது— என்பதை எவர் மறுப்பர் ? அல்லது மறைப்பர் ?

இரட்டைப் பாவியம் என்பது சிலப்பதிகாரம்-மணிமேகலை. இவற்றின் காலம் கி.பி. 2-ஆம் நூற்றாண்டாகும். அக் காலத்தில் குளியல் சிறப்படைந்திருந்ததை அந்த இலக்கியங்களின் கீழ்க் காணும் அடிகளாலேயே அறியலாம்.

'பொய்கை புக்குஆடிப் போதுவாள் போன்று'

என்று மணிமேகலையும்

'மங்கல மடந்தையை நன்னீ ராட்டி'

என்று சிலப்பதிகாரமும் கூறுகின்றன. முன்னது குளத்தில் குளித்ததையும், பின்னது, மகளிர் பலரும் கூடுவதற்கேற்ற வள மனையில் குளிக்கச் செய்ததையும் தெரிவிக்கின்றன.

இரட்டைப் பாவியங்களுக்கு முற்பட்ட நூல் திருக்குறள். அதன் காலம் கி.மு. 31. வள்ளுவர் வாழ்ந்த அக்காலத்திலும் குளியல் சிறப்புற்றிருந்தது என்பதைத் திருக்குறள் மூலமாகவே அறியலாம்.

வள்ளுவர் 'நீந்துதல்' என்னும் சொல்லினைப் பல குறட்பாக் களில் கையாண்டுள்ளார். எடுத்துக்காட்டாக ஒன்றினில் காண்போம்.

'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்' (குறள்: 10)

எனவே வள்ளுவர் காலத்தில் 'நீச்சல் பயிற்சி' சிறப்புற்றிருந் திருக்கிறது. அனைவரும் நீச்சல் பயிற்சிக்கு முதலிடம் தந்திருப்பர் என்பதனையும் உய்த்தறியலாம். ஆதலால் அக்காலத்து மக்களி டையே குளியலும் சிறப்பாகப் போற்றப்பட்டிருக்கும் என்பது வெள்ளிடை மலை.

திருவள்ளுவர்,

'புறந்தூய்மை நீரான் அமையும்; அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்' (குறள்: 298)

'மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்' (குறள்: 278)

என்னும் குறள்கள் மூலம் மக்கள் உடல் தூய்மையை நீரால் செய்தனர் என்பதனைக் குறிப்பிடுகின்றார். மேலும்,

'களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று' (குறள்: 929)

என்னும் குறளில் 'குளித்தல்' என்னும் சொல்லினையே கையாண்டுள்ளார்.

ஆதலினால் வள்ளுவர் வாழ்ந்த காலமாகிய கி.மு. முதல் நூற்றாண்டில் குளியல் தமிழ்நாட்டில் வழக்கமான செயலாகவே இருந்திருக்கிறது என்பது திண்ணம்.

திருவள்ளுவர் காலத்துக்கு முற்பட்ட கி. மு. 5-ஆம் நூற்றாண்டிலிருந்துதான் 'கழகக் காலம்' (சங்க காலம்) தொடங்குகின்றது. (அஃதாவது கடைச்சங்கம்) அக்காலத்தைச் சார்ந்த பாடல்களைக் கொண்ட அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, ஐங்குறுநூறு போன்ற நூல்களிலும் 'குளித்தல்' பற்றிய செய்திகளைக் காணலாம்.

'தாதுஆர் காஞ்சித் தண்பொழில் அகல்யாறு
ஆடினை' (அகநானூறு : 246) - என்னும்

அடிகளின் மூலம் ஆற்றில் மக்கள் நீராடும் செய்தியினையும்,

'கழைக்கண் நெடுவரை யருவி ஆடி' (புறநானூறு: 251)

என்னும் அடியின் மூலம் அருவியில் நீராடும் செய்தியினையும்,

'நீர் நீடாடிற் கண்ணும் சிவக்கும்' (குறுந்தொகை: 354)

என்னும் அடியின் மூலம் கண்கள் சிவக்க நீராடும் செய்தியினையும்,

'நறுவீ ஐம்பால் மகளிர் ஆடும்
தைஇத் தண்கயம் போல' (ஐங்குறு நூறு: 84)

என்னும் அடிகள் மூலம் மகளிர் குளத்தில் நீராடும் செய்தியினையும் அறிகிறோம்.

கடைக் கழக(சங்க)க்காலத்திற்கு முற்பட்ட நூல் தொல்காப்பியம் ஆகும். அதன் காலம் கி.மு. 1000 என்பர் அறிஞர். இன்னும் சிலர் அதற்கும் முற்பட்டதென்பர். அத் 'தொல்முது' தொல்காப்பியத்திலும் குளித்தல் பற்றி அறியலாம்.

தலைவனும், தலைவியும் தங்கள் இல்லங்களில் இன்முறுவலுடன் நன்னீரில் குளித்து, நறுமணத் துகள் பூசி மகிழ்வது மட்டுமன்றி ஊரினை விடுத்து ஆறு, குளம், பூங்கா இவற்றிலும் ஆடி மகிழ்ந்திருந்தனர் என்பதனைத் தொல்காப்பியம் கற்றோரும், இனி நன்கு கற்போரும் மறுக்காமல் ஏற்றுக்கொள்வர். ஏனெனில் தொல்காப்பிய நூற்பாவே இச்செய்தியினைக் குறிக்கின்றது.

'யாறும் குளனும் காவும் ஆடிப்
பதியிகந்து நுகர்தலும் உரிய என்ப' (நூற்பா: 1137)

அஃதாவது பொருளதிகாரம் மரபியலில் இதனைக் காணலாம்.

தொல்காப்பியர் காலத்தில் மன்னர், மக்கள் அனைவரும் இயற்கைப் பொலிவோடு விளங்கும் ஆறு, பொய்கை ஆவற்றினிலே நீராடி மகிழ்ந்திருந்தனர் என்றுலும், வள மனைகளிலும், இல்லங்களிலும் வாய்ப்பாக அமைக்கப்பட்ட குளியல் அறைகளிலும் குளித்தின்புற்றனர் என்பதனையும் தொல்காப்பியததின் மூலம் ஆய்ந்தறியலாம்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் புறத் திணையியலில் உள்ள இறுதி நூற்பாவின் (1037) 9 ஆம் அடியாகிய 'சிறந்த சீர்த்தி மண்ணுமங் கலமும்' என்பதன் மூலம் மன்னனுககு நீராட்டு மங்களம் (அபிஷேகம்) செய்தனர் என்பது தெற்றென விளங்குகிறது. இஃது குளத்தினிலோ, ஆற்றினிலோ அல்லாமல் அழகான அரண்மனையில் பொதுமக்கள் மட்டுமன்று, அறிவுடை முதுமக்களும், அமைச்சர் குழுவும் அவைக்குழுவும் மற்றும் முகாமையானவர்களும் காணும்படியாக அமைக்கப்பட்ட குளியல் அரங்கில் நிகழ்ந்ததே என்பதனை எண்ணி அறியலாம்; பொதுமக்கள் காண்பதற்கு இசைவளிக்கப்பட்டிருக்காதெனினும் புலமக்கள் வீரர்கள் காண்பதற்காக்வாவது இசைவு அளிக்கப்பட்டிருக்கும்.

வேந்தரை நீராட்டுதல் அன்று. நடுகல், வாள் இவற்றையும் நீராட்டிச் சிறப்புச் செய்தனர் என்பதையும்,

'காட்சி கால்கோள் நீர்ப்படை நடுமல்' (தொல்: 1006)

'வென்ற வாளின் மண்'ணு மங்கலம். (தொல்: 1514)

என்னும் நூற்பாக்களால் அறியலாம்:

கி. பி. 1922-ஆம் ஆண்டில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் சிந்துவெளியில் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டனர். புதைந்துகிடந்த இரு பழைய நகரங்களை அங்கு அகழ்ந்தெடுத்தனர். அங்குக் கிடைத்த சான்றுகளிலிருந்து அங்கு வாழ்ந்த மக்கள் சிறந்த நாகரிகத்துடன் வாழ்ந்திருக்க வேண்டுமெனப் புலப்படுகிறது அவர்கள் நகரங்களில் வாழ்ந்தனர் நகரத் தெருக்கள் நேராகவும் அழகாகவும் அமைக்கப்பட்டிருந்தன சுட்ட செங்கற்களால் வீடுகள் கட்டப்பட்டிருந்தன. என அறிகிறோம்.

மேலும் வீடுகளில் தாழ்வாரங்கள், சமையல் அறைகள், குளிக்கும் அறைகள், கழிவுநீர்ப்பாதைகள், அமைக்கப்பட்டிருந்தன

மற்றும் நகர்க்கு நடுவில் பொது நீச்சல் குளமும் அமைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு சிறப்புடன் அங்கு வாழ்ந்த மக்களே சிந்து சமவெளி மக்களாவர்.

Scanned with CamScanner

‘ஈழம்’ ‘தமிழீழம்’ ஆகிய சொல்லாட்சிகள் மீதான சில கருத்துகள்!

— இரணியன்

தமிழீழ விடுதலைக்கென இயங்கும் அமைப்புகளில் ஒன்றான ‘ஈழப்புரட்சி அமைப்’பின் (EROS) நிகராளியான தோழர் முகிலன் அவர்கள். ‘ஈழம்—தமிழீழம்’ என்னும் சொற்களுக்கு வேறு வேறு பொருள் அடைவுகள் தந்து மடல் எழுதியுள்ளார். 22-7-85 ‘தினமணி’யில் அம்மடல் வெளியாகியுள்ளது.

சில பத்தாண்டுகளுக்கு முன்புவரை ‘ஈழம்’ என்னும் சொல் இலங்கைத்தீவு முழுவதையுமே குறித்துவந்த ஒன்றுதான் என்பதை நம் அனைவரும் அறிவோம். ‘ஈழம்’ என்பதற்கு, அகரமுதலிகளில், ‘சிங்களத்தீவு, இலங்கைத்தீவு, இலங்கையின் மற்றொரு பெயர்’ என்ற பொருள்களே தரப்பட்டிருப்பதைக் காண்கிறோம்; ‘ஈழம்’ என்னும் இப்பெயர் தோன்றிய காரணத்தை அறிவது கடினம். கடலில் மூழ்கிய குமரிக் கண்டத்தின் வடபகுதியில், ஏழ்தெங்க நாடு ஏழ்பனை நாடு போன்ற நாடுகள் இருந்தனவாம். குமரிக் கண்டத்தின் எச்சமாக இலங்கை இருப்பதால், ‘ஏழகம்’ என்னும் பெயரே ‘ஈழம்’ என ஆனதாகச் சிலர் கூறுகின்றனர். இலங்கை, அரத்தினக் கற்கள் உடைய தீவு. எனவே, ஒளி இலங்குவதால் இஃது ‘இலங்கை’ எனப்பெயர்பெற்றதாம். சிங்கள மக்களின் முன்னோர்கள் இங்கே குடியேறியபோது, அவர்களும் இத்தீவை இப்பெயராலேயே குறிப்பிடலாயினர்.

இலங்கை என்னும் பெயரைத் தமிழர்களே இத் தீவிற்கு இட்டனரெனினும், இலங்கையை உணர்வுபடக் குறிக்கும்போது, ‘ஈழம்’ என்றே குறித்திருக்கின்றனர். சிலப்பதிகாரம், பட்டினப் பாலை போன்ற தொல்லிலக்கியங்களில் ‘ஈழம்’ என்னும் சொல்லால் இலங்கை குறிக்கப்படுகிறது. ஈழத்தைச் சேர்ந்த புலவர் பலரின் பாடல்கள் இன்றும் கழக இலக்கியத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கக் காண்கிறோம். இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து, சேரநாட்டில் குடியேறிய உழுதொழில் மக்கள் இன்றும் ‘ஈழவர்’ என்றே குறிக்கப்படுவது, கேரள நடைமுறையாய் உள்ளது.

இவற்றால், தமிழ்மக்கள் இலங்கையை உயர்வுடன்-மதிப்புடன் குறிப்பிடும் சொல்லாக ‘ஈழம்’ என்பதைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை அறியலாம். ஆனால், சிங்கள மக்களின் முன்னோர்கள் ‘இலங்கை’ என்னும் சொல்லைத்தான் ஏற்றுப் பயன்படுத்தினரே தவிர ‘ஈழம்’ என்னும் சொல்லை ஏற்றுப் பயன்படுத்த முன்வரவில்லை. ஒருகால், இச்சொல், அவர்களுக்கு அறிமுகம் ஆகாமலே இருந்தும் இருக்கலாம். (இவ்விரு சொற்களுமே, சிங்கள மக்களின் முன்னோர்களின் குடியேற்றத்துக்கு முன்பே, பழங்குடிகளாய் அங்கு வாழ்ந்த தமிழ்மக்கள் பயன்படுத்திய சொற்களே என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.)

இப்போது, நமது காலத்திற்கு வருவோம். இலங்கையின் (அஃதாவது, தமிழ், சிங்களம் என்னும் இருவகை மொழிகட்கு உரிய நிலப்பரப்புகளையும், இலங்கைத்தமிழர், இந்தியத் தமிழர், தமிழ்ச் சோனகர் என்னும் இசுலாமியர், சிங்களவர் என்னும் நால்வகை இன மக்களையும் கொண்ட இப் பெருந்தீவின்.) இனப் பூசல் புதுப்புது அரசியல் நிலைப்பாடுகளாக உருக்கொண்டபோது, தமிழ்பேசும் எல்லா மக்களும், தங்கள் தமிழ்நிலத்தைச் சிங்களவரிடமிருந்து விடுவித்துக்கொண்டு, தனி அரசை அமைத்துக் கொள்ளத் தீர்மானித்தனர். அப்போது, தமது புதிய தேசத்திற்கு என்ன பெயர் இடுவது என எண்ணமிட்டனர். தமிழ்நாடு, தமிழம் என்னும் பெயர்களோ இந்தியத் தமிழ் நாட்டையே குறிக்கும். எனவே, இலங்கைத் தமிழகம் அல்லது ஈழத் தமிழகம் என்னும் பெயர்களை அவர்கள் ஆய்வு செய்தனர். இவற்றிலும் சில குழப்பங்கள் இருப்பதாகக் கருதினர். எனவே, சிங்கள இலங்கை நீங்கலான தமிழ் இலங்கைக்குப் பொருத்தமான ஒரு பெயரைத் தேர்ந்தெடுத்தனர். இலங்கை என்பதன் பெருமிதம் வாய்ந்த பெயராகிய 'ஈழம்' என்பதைச் சேர்த்துத் 'தமிழ் ஈழம்' எனப் பெயர் சூட்டினர்.

தமிழ்ஈழக் கோரிக்கை, மிதவைப் போக்குடைய 'தமிழரசுக் கட்சி' அதன்பின் 'தமிழர் விடுதலைக் கூட்டணி' (TULF) ஆகியவற்றின் கைகளிலிருந்து, போராளிகள் கைக்கு மாறியபோது, சில அடிப்படைக் கவனிப்புகள் நிகழ்ந்தன.

அஃதாவது, தேசத்திற்கு (அஃது அளவால் பெரிதாக இருக்கலாம்; அல்லது சிறிதாக இருக்கலாம்), மொழியை முன் நிறுத்திப் பெயர் சூட்டுவது, 'மொழி வேட்கையால் மட்டும்தான் தனித் தேசக் கோரிக்கை எழுப்பப்படுகிறது' என்னும் பிழையான கருத்தை உருவாக்குமோ எனச் சிலர் ஐயுற்றனர். இக் கருத்து தேச விடுதலைப் போராட்டத்தின் கனத்தைக் குறைவுடைய தாக்கலாம் எனவும் கருதினர். இதனால், 'தமிழ் ஈழம்' எனக் குறிப்பிடுவது வேண்டியதில்லை; 'ஈழம்' என்பதே பொருத்தமாகும் எனக் கருதினர். ஏன்?

கிறித்து ஊழிக்கு முன்பே, இலங்கைத்தீவு முழுவதிலும் தமிழ்மக்கள் சிறுசிறு இனக்குழுக்களாக வாழ்ந்தபோது, அத்தீவை 'ஈழம்' என்றும் 'இலங்கை' என்றும் அழைத்தனர். பின்னர், சிங்கள மக்களும் 'இலங்கை' என்னும் பெயரைப் பயன்படுத்தினர். ஆனால், 'ஈழம்' எனனும் பெயரை அவர்கள் பயன்படுத்த முன்வரவில்லை.

சிங்கள மக்கள் குடியேற்றத்துக்கு முன்புதொட்டே, 'ஈழம்' என்பது 'இலங்கைத் தமிழ்நிலப்பரப்பு' என்னும் பொருளையே நடைமுறையில் கொண்டிருந்தது. அன்று முழு இலங்கையும் தமிழ்நிலப்பரப்பே! எனவே முழு இலங்கையும் 'ஈழம்' என அழைக்கப்பட்டது. இப்போது, இலங்கை முழுத் தமிழ்நிலப் பரப்பாக இல்லை. ஒரு பகுதி சிங்கள நிலப்பரப்பாகிவிட்டது. எனவே, இன்று மீதமிருக்கும் தமிழ்நிலப்பரப்பை மட்டுமே 'ஈழம்' எனக்குறிப்பிடுவது பொருத்தம் உடையதாகும்.

Scanned with CamScanner

இதற்கு எடுத்துக்காட்டாக ஒன்றைக் கூறலாம்.

இன்றைக்கு அரை நூற்றுண்டுக் காலத்திற்கு முன்பு, 'பாரதம்' அல்லது 'இந்தியா' என்றால், அஃது இன்றைய வங்காள தேசம், பாகித்தான், ஆப்கான் பகுதிகள் சில, பர்மாப் பகுதிகள் சில... அனைத்தையும் உள்ளடக்கியதே. ஆனால், அவற்றையெல்லாம் இன்று 'இந்தியா' அல்லது பாரதம்' என நாம் குறிப்பிட இயலாது. இன்று நம் கைகளில் இருக்கும் நமது பகுதியை மட்டுமே பாரதம்-இந்தியா எனக் குறிப்பிடுகிறோம். அதுபோல் தான், இலங்கை முழுவதும் தமிழ் மண்ணாக இருந்தபோது, தமிழர் அதன் பெருமிதப் பெயராக ''ஈழம்'' என்பதை வழங்கி வந்தனர். தமிழ்ப் பரப்புச் சுருங்கியபோது, சுருங்கியிருக்கும் தமிழ்ப் பகுதியை மட்டுமே ''ஈழம்'' என்னும் பெருமிதப் பெயரால் குறிப்பிட முடியும். இன்றைய உலக நடைமுறைக்கு இணக்கமான புறவய உண்மை இதுதான்!

ஆகவே, இன்றைய நிலையில், மொத்த இலங்கையை ''ஈழம்' எனபதில் பொருத்தப்பாடு இல்லை. தமிழ்ப் பகுதிதான் ''ஈழம்'' ஆகும். அதனைத் ''தமிழ் ஈழம்'' எனக் குறிப்பிட வேண்டிய கட்டாயம் இல்லை.

அஃதாவது, ''சிங்கள ஈழம்'' என ஒன்று இல்லை. அது ''சிங்கள ஸ்ரீலங்கா'' ஆகிவிட்டது. ''தமிழ் ஈழம்'' தான் 'ஈழம்'! எனவே, அதனை 'ஈழம்' என்றாலே நிறைவானதாகத்தான் அமையும்.

பாலத்தீனியர் மொழியால் அராபியர்தாம்! அவர்கள் 'அரபி பாலத்தினம்' வேண்டும் எனக் கேட்கவில்லை! நிலத்தால் அவர்கள் பெயர் பெறும்போது, பாலத்தீனியர்தாம். அதுபோல், இலங்கைத் தமிழரும் நிலத்தால் ஈழவரே! அவர்களின் தாயகம் ஈழமே! அவர்களின் விடுதலைப்போர் 'ஈழ விடுதலைப் போரே!'

மொழியால் அவர்கள் தமிழர்!
மதத்தால், சைவர்! கிறித்துவர்! இசுலாமியர்!

தமிழரசுக் கட்சியின் பரம்பரையில் வந்த விடுதலைப் போராளிகள், 'தமிழ் ஈழம்' என்னும் சொல்லையே பயன்படுத்துகின்றனர். ஆனால், பொதுவுடைமைக் கட்சி வழி மரபினராகிய போராளிகள், 'ஈழம்' என்றே இலங்கைத் தமிழ் நிலத்தைக் குறிப்பிடத் தொடங்கினர். EROS, EPRLF போன்றவை இவ்வகைப் பட்டவை,

இலங்கை வாழ் இந்தியத் தமிழரின் தாய்மண் மலையகமாகும்.

(குறிப்பு: இந்த மக்கள் அங்குக் குடியேறி 150 ஆண்டுகள் ஆவதாலும், மலையகத்தில் முதன்முதல் குடியேறியவர்களும், பண்படுத்தியவர்களும், பயிர் செய்தவர்களும், அந்த மண்ணுடன் ஒட்டிய வாழ்வைத் தொடங்கியவர்களும் இவர்களே ஆவர் ஆதலாலும், இலங்கையின் பொருளியல் மேம்பாட்டின் ஆணிவேர் இவர்களே ஆவர்

Scanned with CamScanner

என்பதாலும், மலையகத்தை இலங்கை வாழ் இந்தியத் தமிழரின் தாய் மண் எனக் குறிப்பிட முடியும்).

'தமிழ் ஈழம்' எனக் குறிப்பிட்டவர்கள் இந்த மலையகத்தைத் தமது தமிழ் ஈழத்தினுள் சேர்க்கத் தவறிவிட்டனர்.

இஃது, தொடக்க கால அரசியல் நடைமுறைப் பிழைபாடே தவிர, குற்றம் உடையதோ உள் நோக்கம் உடையதோ அன்று. இவர்கள் மலையகத் தமிழர் நலத்தில் அக்கறை இல்லாதவர்களும் அல்லர்.

பின்னர் வந்த போராளிகள், மலையகத்தையும் கோரப்படும் தமது தனி நாட்டுக்குள் சேர்த்துக்கொண்டனர். EROS, EPRLF ஆகியவற்றின் ஈழப்படம் இதனைக்காட்டும் LTTE, TELC PLCT ஆகியவற்றின் படங்களில் மலையகம் தமிழ்ஈழப் பகுதியாகக் காட்டப்பட்டிராது. இஃது தொடக்கக்கால நடைமுறைப்பழுது. இவர்களும் அரசியல் ஆய்வுகளை மேற்கொண்டு, மலையகத்தை உட்படுத்தி ஈழ விடுதலை கேட்பது தான் முறையாகும்.

மற்றபடி ''மலையகம் உள்ளடக்கியது ஈழம்; மலையகம் நீங்கியது தமிழீழம்'' என்னும் விளக்கம் பயனற்ற குழப்பத்தைத் தருவது! எந்த அடிப்படையும் இல்லாதது!

ஈழம்-தமிழீழம் இரண்டும் ஒன்றுதான்!

இன்றைய நிலையில் போராளிகளுக்குப் பின்கண்ட தெளிவுகள் தேவை: அவை :

1. இலங்கையின் தமிழர் நாடு 'ஈழம்' தான்! 'தமிழ் ஈழம்' என்றாலும், ஒன்றும் பிழை ஆகிவிடாது. சிங்களப் பகுதி ஈழம்' என இனி ஒருபோதும் ஆகாது. தமிழில் 'தமிழீழம்' என்றாலும், ஆங்கிலம் முதலிய அயல் மொழிகளில் 'இலங்கைத் தமிழ் நிலப்பரப்பின் பெயர் ஈழம்', அது இலங்கைத் தமிழரின் தாயகம்'' என்பது பெருவழக்காகிவிட்டது.

2 கோரப்படும் 'ஈழம்' அல்லது 'தமிழ் ஈழத்தில்', மலையகம் ஒரு தவிர்க்க முடியாத பகுதி இசுலாமியத் தமிழர் பெருகி வாழும் அம்பாறை மாவட்டத்திற்கும், மலையக மாவட்டங்களுக்கும் இடைவெளி குறைவே. எனவே, நில இணைப்புச் செய்வது அரியதன்று.

3. தனி ஈழத்திற்குத் தமிழ்ப்பகுதிகள் முழுவதுமாகக் கோரப்பட வேண்டும். அதுதான் கோரிக்கையின் செப்பத்தைக் காட்டும். எல்லைகள் தீர்மானிக்கப்படுவது பின்னர்தான். அதற்குரிய நேரம் வேறு.

4. 'தமிழ் ஈழம்' அல்லது 'ஈழம்' தனி நாடாகாமல், இலங்கைக்கு உட்பட்ட மொழிவாரி மாநிலம் ஆனாலும், மலையகம் ஈழ மாநிலத்தில் அடங்கியதாகவே இருக்கவேண்டும்.

போராளிகள், தமக்குள் மனவேறுபாடுகளை ஏற்படுத்தும்படியான எதனையும் பேசவோ, எழுதவோ கூடாது. பின்னர்

செய்திகள்

1. அரங்கசாமி - பத்மினி வாழ்க!

தி பி. 2016 ஆடவை 23 ஆம் பக்கல் (7-7:1985) ஞாயிற்றுக் கிழமை காலை 10-30 மணியளவில், துரை முத்தையா திருமண மண்டபத்தில் செல்வன்: வே. அரங்கசாமி, செல்வி: பத்மினி ஆகியோரின் தமிழ்த் திருமணம். உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் தலைமையில் மிகச்சிறப்பாக நடந்தேறியது.

மணமக்களை வாழ்த்தி, சென்னை நிலச் சீர்திருத்தத்துறை இயக்குநர். பர். பாண்டியன் (பாவலர் பேகன்), க.மு., ப இ., இல.இ., இ ஆ:ப., ஈரோடு காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர் திரு. அய்யாச்சாமி, தில்லி நடுவண் பண்டகக் காப்புக் குழுமம் திரு. குறள் நாதன, அறி மு., உதவிக் கோட்டப் பொறியாளர் திரு: அன்னக்கொடி, தனிப் பயிற்சிக் கல்லூரி முதல்வர். திரு. வி ஏ இருளப்பன், க மு. அய்யம்பாளையம் திரு. வேலுச்சாமி, கோவை மாவட்ட உ.த மு.க. தலைவர் பல்லடம் திரு மா. ஆறுமுகம், உ த மு க. துணைப் பொதுச்செயலர் திரு. தென்னவன்கோ, ,, முதன்மைக் குழு உறுப்பினர் திரு தென்மொழி ந. முத்துக்குமரனார் ஆகியோர் உரையாற்றினர்.

திருமணத்தைத் தலைமையேற்று நிகழ்த்தி வைத்துக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் வாழ்த்துரை

(முன் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானிக்கப்பட வேண்டியதை முன்னரே போட்டுக் குழப்பக் கூடாது.

இன்றைய போராட்டம், தமிழர் தம் உரிமைகளை மீட்டெடுப்பதற்கான போராட்டம். அழிவின் இறுதி முனையில் ஓர் இனம் உயிரைக் காக்க, உயிரையே அடகு வைத்து நடத்தும் போராட்டம்!

உரிமைகள் மீட்டெடுக்கப்படும்போது, தாய் மண்ணும் கைக்கு வரலாம்! அல்லது 'மொத்த இலங்கைக்கு உள் ஒரு மாநிலம்' என்பது மட்டுமே கிடைக்கவும் நேரலாம்!

ஏதோன்றும் நீண்டகாலப் போராட்டத்தால்தான் வாய்க்கக் கூடிய நிலைமை உள்ளது. இந்த நிலையில் போராளிகளிடமிருந்து தெளிவான செய்திகளும் குழப்பமான சொற்களால் வெளிப்படுவது வருந்தத்தக்கது! தவிர்க்கப்பட வேண்டியது!

ஈழச் சிக்கலைத் தொடர்ந்து மக்களுக்குத் தெளிவுபடுத்திவரும் 'தென்மொழி' மேற்காணும் கருத்துரைகள் பற்றியும் மக்களுக்குத் தெளிவூட்ட வேண்டும் என வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறோம்.

Scanned with CamScanner

வழங்கினார். திரு ஆ. விசுவநாதன் நன்றி நவில, இனிய விருந்துடன் திருமண நிகழ்ச்சி நிறைவடைந்தது.

2. அறிவுச்செல்வன் – கல்யாணி வாழ்க!

தி.பி. 2016, ஆடவை 23-ஆம் பக்கல் (7-7-80) ஞாயிற்றுக் கிழமை மணப்பாறையில், துவரங்குறிச்சி புலவர் அச்சக உரிமையாளர் செல்வன் அறிவுச் செல்வன், செல்வி. கல்யாணி ஆகியோரின் திருமண விழா நிகழ்ந்தேறியது. அன்று மாலை உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் கலந்துகொண்ட வாழ்த்துரை நிகழ்ச்சி இடம்பெற்றது. மணப்பாறை வட்ட உ.த.மு.க. செயலர் புலவர் நாவை. சிவம், புலவர் க. இருளப்பன், உ. த. மு. க. துணைப் பொதுச் செயலர், தென்னவன்கோ ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இறுதியாகக் கழக முதல்வர் பாவலரேறு ஐயா அவர்கள் மணமக்களை வாழ்த்தி இனிய கருத்துரை வழங்குகையில், 'அறிவும் அன்பும் பொருந்தியதே மாந்த வாழ்க்கை; இதில் 'திருமணம்' என்பது மாந்தக் குலத்திற்கே பெருமையான ஒன்றாகும். மக்களின் 'இயக்கமே' வாழ்க்கை ஆகிறது. பிற உயிர்கள் 'வாழ்வ'தில்லை. மாந்தரிலும் 'வாழ்க்கை'யின் முழுப் பொருளுடையவராக எவரும் வாழ்வதில்லை. மக்களினத்திற்கே தம்மை ஒப்புவித்துக்கொண்டவர்களே 'வாழ்கிறார்'கள். அவர்களது வாழ்க்கையே 'வரலாறு' ஆகிறது. ஒருவரின் தோற்றமே பெருமை பெறுவதாய் அமைகிறது. ஆணின் தோற்ற மலர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் பெண்ணே காரணியமாவதுபோல், அவனைப் புரந்து பேணுவதிலும் நல்ல துணையாகவும் விளங்குகிறாள். அப் பெண் முற்பகுதியில் தாயாகவும், பிற்பகுதியில் துணையாகவும் ஒளிர்கின்றாள். இப் புடவியில் பெண்ணே பெருமையான படைப்பாகிறாள். அதனாலே 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்றார் திருவள்ளுவர். பெண் எல்லாவற்றையும் புகட்டுகின்ற பேராசிரியராகவும் திகழ்கின்றாள். தாய்மையுணர்ச்சியோடு புரந்து பேணிக் காக்கின்றாள். மலர்ச்சியையும் வளர்ச்சியையும் உருவாக்கி உலகுக்கே இன்பத்தைத் தருகிறாள். அன்பு—தன்னொடும், தன்னைச்சார்ந்த குடும்ப உறவோரும் கலந்தது. பிறர்க்கும் உலகுக்கும் பயன்படுமாறு அமைவதே அறம். இவை இரண்டும் கலந்ததே வாழ்க்கை.

இவ் வன்பும் அறமும் பண்பை உணர்த்திக் காட்டுவதாக இருத்தல் வேண்டும். இப்பண்பே பெருமைப்படுகிற உணர்ச்சியை உருவாக்குகிறது. இயங்கியல் அடிப்படையில் உயிர்களின் படிமுறை வளர்ச்சியாகப் பண்பு அமைகிறது. இப் பண்பும் தூண்டுதல் உணர்வை-முயற்சியை-சிந்தனையைத் தோற்றுவித்தல் வேண்டும்.

அன்பு, செயலாக மலர்வதுதான் பண்பு; ஒருவரிடத்தில் உள்ள அன்பை இன்னொருவர் புரிந்து கொள்கிறாற்போல் நடப்பதுதான் பண்பு. எனவேதான் கழகநூல் புலவரும் 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்' என்றார்.

இந்த அன்பு வாழ்க்கை தமக்காகவும், குடும்பத்திற்காகவும், அறவாழ்க்கை இனத்திற்காகவும் நாட்டிற்காகவும் உரியவாக அமைதல் வேண்டும். இதன் வழியாகவே பெற்றோர்க்கும் மகிழ்ச்சி ஏற்படுகிறது; இனத்துக்கும் பயன் கிடைக்கிறது' என்று ஒருமணி நேரத்திற்கும் மேலாக வாழ்வியல் நுட்பத்தை விளக்கி யுரைத்தார். மணமக்கள் நன்றி நவில வாழ்த்துரை நிகழ்ச்சி இனிதே நிறைவெய்தியது. — செய்தி : 'நெடியோன்'

3. பழனி - சிலம்புச்செல்வி வாழ்க !

கடந்த ஆடவைத் திங்கள் 20 (14:7-1985) ஆம் நாள், காலை 9 மணியளவில், வேலூரை அடுத்த பள்ளிகொண்டாவில், கன காம்பாள் விசயரங்கனார் திருமண மண்டபத்தில், மசமதுபுரம் பெ. முனிசாமி மு. அமிர்தம்மாள் ஆகியோரின் மகன் செல்வன்: மு. பழனி (வணி. இ. :க்கும், வேலூர் இராமநாயினி குப்பம் பெ. வில்லியம், வி. கோகிலா ஆகியோரின் மகள் செல்வி : வி. சிலப்புச் செல்விக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையிலும் திரு. எம். பலராமன் (செயற் பொறியாளர், வேளாண்மைத் துறை, வேலூர்) அவர்கள் முன்னிலையிலும். திருமணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி முன்னிலையரும் திருவாளர்கள் புலவர். தன்னொளியன் க.மு., உலகமுதல்வன் க. மு. பேரா, எ. சி. ஞானப்பிரகாசம் க.மு. மெய் மு புலவர். சுந்தரேசன். பொன். ஆனந்தராசு க. இ. (துணை மின் பொறியாளர். மின்சாரவாரியம்), அ. முத்தை யன். அரங்க. பாலச்சந்திரன் க மு. ஆகியோர் வாழ்த்துரைக்குப் பின் தலைவர் அவர்கள் மணமக்களை வாழ்த்தும் முகமாக, நீண்ட கருத்துரையாற்றினார்: இறுதியில் மணமகன் மு. பழனி நன்றிகூற மண விருந்துடன், விழா இனிது நிறைவுற்றது.

4. அவலூர்ப்பேட்டை-அரசு மேனிலைப்பள்ளி - இலக்கிய மன்றத் தொடக்க விழா !

கடந்த 15-7-1985 திங்கள் அன்று, காலை 10 மணியளவில் நடைபெற்ற பள்ளி இலக்கிய மன்றத் துவக்கவிழாவில், பங் கேற்று, இலக்கிய மன்றத்தைத் தொட கி வைத்துப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் சிற புரையாற்றினார்கள்.

பள்ளித் தொடக்க நிகழ்ச்சியும் தமிழ்த்தாய் வாழ்த்தும் சரியாகக்காலை 9-45-க்கு முடிந்தபிறகு, இலக்கியமன்றத்தொடக்க விழாவிற்கு மாணவர்களும் ஆசிரியர்களும் அணியமாகி அரங்கில் சென்றமர்ந்தனர் அரங்கினுள் ஏறத்தாழ 2 0 மாணவர்களும், பொதுமக்களும், ஆசிரியர்கள் சிலரும், முகாமையான சிலரும் அமர்ந்திருந்தனர்: அரங்கின் வெளியில் ஏழத்தாழ ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களும்; ஆசிரியர்கள் ஆசிரியைகள், பொது மக்கள் பலரும் அமர்ந்து, ஐயாவின் கருத்துகளை அமைதியுடன் கேட்டனர்.

தலைமையுரையின் போது, பள்ளித் தலைமையாசிரியர் எசு. பால சுப்பிரமணியம் அவர்கள் அவலூர்ப்பேட்டை உ.த.மு.க.சிறப்பை

யும் அதன் முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் சிறப்பையும் புகழ்ந்து பாராட்டிப் பேசினார். உள் அரங்கத்தில் அமர்ந்திருந்த மாணவ, மாணவியர் போக, வெளியே, தாழ்வாரத்திலும், திடலிலும், மரங்களினடியிலும் அமர்ந்திருந்த, மாணவ, மாணவியரும், ஆசிரியர், ஆசிரியைகள் அனைவரும் ஐயாவை நேரில் பார்த்தவண்ணம் பேச்சைக் கேட்க இயலாத அளவில் இருந்ததற்கு வருத்தம் தெரிவித்ததுடன் அமைதியான முறையில் பேச்சைக் கேட்டுப்பயன் பெறுமாறு அனைவர்க்கும் வேண்டுகோள் விடுத்தார். பள்ளியின் ஆண்டறிக்கையினைப் பள்ளிச் செயலர் புலவர் திருமிகு. நடராசன் அவர்கள் படித்தார். அதன்பின் மருத்துவர் கோ. சரவணன் அவர்கள் உலகத்தமிழின முன்னேற்றக் கழகத்தின் சார்பில், கழக முதல்வர். பாவலரேறு ஐயா அவர்கட்குக் கைத்தறியாடை போர்த்தினார். வரவேற்பு இதழை திருமிகு. தா. நெஞ்சிற்கினியன் படித்தளித்தார்கள்.

இறுதியாகச் சிறப்புரையாற்றிய பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் பேசும்போது, பள்ளியின் அனைத்து ஆசிரியர்கள், மாணவச் செல்வங்களையும் ஒருங்கே ஒரே அரங்கில் காண இயலாமைக்கு மிகவும் வருந்தி, விரைவில் சிறப்பான ஓர் அரங்கத்தினைப் பெற்று மேலும், சிறந்த இலக்கிய மன்றமாக நடத்திட - தமிழ் உணர்வுமிக்க இலக்கிய மன்றத்தை உருவாக்கிட வேண்டிய முன்னுரையுடன் தொடங்கி மாணவச் செல்வங்களே, உங்கள் அனைவரையும் நேரில் காண இயலவில்லை என்றாலும், என் மனக்கண் முன் உங்களைக் கொண்டுவந்து நிறுத்திக் கொண்டுதான் இதனை உரைக்கின்றேன் என்று கூறினார்.

மேலும் 'நீங்கள் எதிர்காலத்தில் இந் நாட்டிற்குச் செய்ய வேண்டிய கடமையையும், இந்நாடு உங்களை மிகவும் எதிர் நோக்கி ஆவலுடன் காத்திருக்கின்ற தன்மையையும் எண்ணிப் பாருங்கள்.' எனவே அதற்குத் தகுந்தாற்போல நீங்கள் நடந்து, உயர்ந்த தமிழ்ப்பற்றுளர்களாக விளங்கவேண்டுகிறேன்! என்று தொடங்கிப் பிள்ளைகட்கு வேண்டிய சிறு சிறு இலக்கியங்களை மேற்கோள் காட்டி விளக்கினார். மேலைநாட்டில் பிள்ளைகளின் கல்வித்தரம் எவ்வாறு உயர்ந்துள்ளது என்பதையும் விளக்கிப் பாவேந்தர் பாரதிதாசனாரின் பாடலையும் இனிமையான குரல் வளத்துடன் பாடிக்காட்டினார்! இதனைக் கேட்டுக்கொண்டிருந்த அனைத்துப் பகுதி ஆசிரியர்களும் பாராட்டினார்கள்.

இறுதியில் பாவலரேறு அவர்களை நேரில் காண வேண்டுமென்ற பிள்ளைகளின் ஆர்வத்தை நிறைவு செய்ய வேண்டி, மேனிலைப் பள்ளியின் அனைத்து வகுப்புகளுக்கும் பாவலரேறு ஐயா அவர்கள் தலைமையாசிரியருடனும்; பிறருடனும் சென்று அனைவரையும் வாழ்த்திப் பாராட்டினார். பின் சாரவுணவுக்கூடம் சென்று, அங்கு செய்து வைத்த உணவைச் சிறிது உண்டு அதன் தரத்தை அறிந்தார். இந்நிலை அனைவராலும் பாராட்டப்பட்டது. பிள்ளைகளும் ஐயாவின் வருகையால் மிகவும் மகிழ்ந்தனர்.

—செய்தி: தா. நெஞ்சிற்கினியன்

வரும்' என்னும் பழமொழியை நினைவூட்டியது. அடிக்கடி தன் உள்ளிருப்பை வெளிப்படுத்தும் 'உண்மை' உள்ளவரை வாழ்க! என வாழ்த்தும்!
— க. கதிர்குன்றன், அமரர்பூண்டி.

0: 1097: உலகத் தமிழின முன்னேற்றக் கழகமும் மக்கள் கலாசாரக் கழகமும் இணைந்து திருச்சிராப்பள்ளியில் அருவருப்புத் திரைப்படம் மற்றும் தாளிகை எதிர்ப்பு ஊர்வலம் நடத்திய செய்தியைத் திருச்சிராப்பள்ளி வானொலி நிலயத்திலிருந்து ஒலிபரப்பாகும் மாநிலச் செய்தி அறிக்கையில் (28-7-85; பிற்பகல் 2-10) கேட்டறிந்தேன். திராவிட இயக்கத் தாளிகைகளே நம் கழகப் பெயர் கூடத் தெரியாதவண்ணம் மூடி மறைக்க முயல்கை யில், இந்திய வானொலி தெள்ளத் தெளிவாக நம் கழகத்தின் பெயரைச் சொன்னது வியப்பிற்குரிய ஒன்றாக இருந்தது.

எந்நாளோ ?

பல்லினத்தை ஓரினமே
　　படைவலியால் ஆளுகின்ற
புல்லடிமைச் சிறுநிலைதான்
　　போவதெந்நாள்? தமிழ்நாடும்
நல்லுலகில் தன்னாட்சி
　　நடத்துகின்ற நாடென்று
சொல்லிடவே தலைநிமிர்ந்து
　　சுடரொளிவீ சுவதுமெந்நாள் ?

— தமிழேறு. கு. இராயவேல், சென்னை.

0: 1098: பெருமதிப்பிற்குரிய ஐயாவுக்கு, வணக்கம். 1967-க்கு முன்பிருந்த தமிழ்ப்பற்று, ஒழுக்கம், பொதுநல ஆர்வம், கடமை உணர்வு 1987-க்குப் பின் இருக்குமா? ஐயப்பாடாகவே உள்ளது. அந்த அளவிற்கு இடைக்காலத்தில் நாம் எதிர்பார்த்த அளவிற்கு மாறாகவே எல்லாம் நடந்து வருகின்றன; காரணியம் என்னவாக இருக்கும்? பெரும்பாலான மக்களின் நாட்டமெல்லாம் தன்னல மாகவே உருவாகிவிட்டதனால்தான் தங்களைப் போன்றோர் ஓரிருவர் கூட போற்றப்படாது புறக்கணிக்கப்படுவது செய்நன்றி கொன்றதாகும்.

பல்வேறு நிலைகளில் ஆசிரியப் பணிப்பயிற்சி முடித்தவர்கள் பத்தாண்டுகளுக்குமேல் கல்வித்துறையில் பணியமர்த்தம் செய்யப் படாது இருப்பது கவலைதரும் செய்தியாகும். இந்நிலையில் 60 அகவை வரை பணிக்காலத்தை உயர்த்த வேண்டுமென ஒரு கூட்டம் கூப்பாடு போடுவது முறையன்று. இன்றுள்ள அரசும் அதிகாரக் கும்பலும் அறக்கேட்டை நாளுக்குநாள் மிகுதியாகச் செய்துவருகின்றன. கைகூலிக் கூட்டமும் இத்தகு இழிவைக் கட்டிக் காத்து வருகின்றன. நல்லவர்கள் அடிப்படைத் தேவைகூட அடைய இயலாமல் அல்லற்பட்டு அழிந்து வருகின்றனர். மக்கள் கூட்டம் நாளும் பெருகி மண்ணை மாசுபடுத்தி வருகிறது.

இப்படிக்கு உண்மையுள்ள, — சி. நா. செந்தமிழ்ச்செல்வன்
வேங்கைவாடி.

0: 1099: அன்புள்ள ஐயா, வணக்கம். நலம் நலமே சூழ தமிழன்னையை வேண்டுகிறேன். தங்களுடைய வெங்கலூர் வருகை மிகவும் மனநிறைவையும் மகிழ்ச்சியையும் அளித்தது. நிகழ்ச்சி மிகச் சிறப்பாக அமைந்ததாக அன்பர்கள் கூறினார்கள். அடுத்து, தமிழ்ச் சங்க நிகழ்ச்சியை 'தினச்சுடர்' நாளிதழ் சிறப் பாக வெளியிட்டிருக்கின்றது. இதனை இம்மடலுடன் அனுப்பி யுள்ளேன். தங்களன்புள்ள, — பொற்செழியன், தலைவர்
தாமரை கலை இலக்கிய மன்றம், வெங்கலூர்.

(தொடர்ச்சி அட்டை 4-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

0: 1100 : அன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கம். முன்பொரு மடலில் குறிப்பிட்டுள்ளபடி, நம் இயக்கக் கொள்கைகளை அடிப்படையாக வைத்து நான் புனைந்துவந்த பாவியம் முற்றுப்பெற்றுவிட்டது. சொல்லாய்வு செய்யும் ஓர் இளைஞனைக் கதைத் தலைவனாக வைத்துப் பாவியம் உருவாக்கப்பட்டிருக்கிறது. தமிழுக்கு உண்மையாகப் பாடுபடுபவர்களை எப்படி அரசியல் தலைவர்கள் புறந்தள்ளி மறைக்கிறார்கள் என்பதும் இன, மொழியுணர்வுகளை எவ்வகையில் மழுங்கடிக்கச் செய்கிறார்கள் என்பதும் தெளிவாகவும் சுவையாகவும் இந்தப் பாவியத்தில் விளக்கப்பட்டுள்ளன. மேலும் தாங்கள் 'குறள் நோக்கம்' பற்றி உரையாற்றும் அரிய நிகழ்ச்சியும், தாங்கள் தொடுத்த இந்திரா சாம்பல் வழக்குச் செய்தியும், செ.சொ.பி. அகரமுதலியில் தங்கள் முயற்சிகளை மூடி மறைத்த செய்தியும் இடம் பெறுகின்றன. பொருள் ஏந்து சிறிதும் இல்லாத ஏழ்மை நிலையிலும் எப்படியும் நூலை வெளிக்கொணர முயல்கின்றேன். எப்படியும் தமிழின விடுதலை முயற்சிகளுக்கு என்னால் இயன்ற பணிகளைத் தவறாமல் செய்து முடிப்பேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம், உ.த.மு.க. தொண்டன்,

—வள்ளிகேள்வன், ஈரோடு

0: 1101 : அன்புமிக்க ஐயா, வணக்கம். 7-7-85 தமிழ்நிலத்தில் வெளியானபடி நெல்லை வானொலியில் பாவலரேறு எழுதிய ஐயை கதையை 25-7-85-இல் இரவு 8 மணிக்கு அதியமான் வில்லிசையில் வடிவமைத்துச் செல்வத்தாயம்மாள் பாடிய வில்லிசையை நண்பர்களோடு கேட்டு மகிழ்ந்தோம். மிகச்சிறப்பான ஏற்பாடுகளோடு பாடிய அம்மையாரைப் பாராட்டிப் புகழ்கிறோம். இந்த நிகழ்ச்சிகளை ஊக்குவிப்பது நமது கடமை. தூயதமிழை ஒலிக்குறையின்றி பலுக்குதல் தவறாது மிகத் தெளிவாகப் பாடியதைக் கேட்டு மிகப் பாராட்டுகிறோம். உ.த.மு.க. தோழர்கள் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டிக் கொள்கிறோம். சிற்றூர்ப்புறத் தமிழ்க் கலைக்கு உயிரூட்டும் பாவலரேறு ஐயா அவர்களை வணங்குகிறோம்.

இங்ஙனம், தங்கள் அன்பன்.

— கோ: இராமன், பாளையங்கோட்டை.

0: 1102 : தமிழாய்ந்த ஐயா, வணக்கம். 25-7-85 அன்று திருநெல்வேலி வானொலி நிலையம் ஒலிபரப்பிய ஐயை என்னும் வில்லிசையைக் கேட்டேன். எங்கள் சிற்றூர் மக்களும் இந்த வில்லிசையைக் கேட்டு அகமகிழ்ந்தார்கள். தூய மொழியில் இருந்ததைக் கண்டு, இதைப் போன்ற சிறப்பான நடையில் நாளும் ஒலிபரப்பினால் தமிழ்மொழி சிதைவதைத் தடுக்கலாமே என்று கூறினார்கள். அச்சமயம் நான் தங்களைப் பற்றியும் தமது இயக்கம் பற்றியும் கூறி அவர்களுக்குச் சில விளக்கங்களையும் அளித்தேன். தங்களன்பு,

— இ. அருள்நேயன், மும்முடிசாத்தான்

0: 1103 : பேரன்பிற்கும், பெருமதிப்பிற்குமுரிய, பாவலரேறு ஐயா அவர்களுக்கு, தமிழ் மொழிக்கும், தமிழ் இனத்திற்கும் தொண்டு செய்யத் தன்னுயிரையும்தர அணியமாயிருக்கும், 'தமிழ்த்தொண்டன்' எழுதும் பணிவுடன் கூடிய முதல் மடல்- மனம் திறந்த மடல். ஐயா வணக்கம்.

(தொடர்ச்சி 7-ஆம் பக்கம் பார்க்க)

Scanned with CamScanner